விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 ஆவணி 5 ஜுலைஜ் 4 இதழ் 193
யாழ்ப்பாணம் புதன்கிழமை 21-8-1985

## இரத்தினபுரியில் தரையிறங்கிய மர்ம 'ஹெலிகொப்டர்!'

(இரத்தினபுரி)

இரத்தினபுரியில் நேற்றுத் திடீரென இறங்கிய மர்ம 'ஹெலிகொப்டர்' குறித்து பாதுகாப்புப் படையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்!

இரத்தினபுரியில், அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனத்துக்குச் சொந்தமான ஒரு தோட்டத்தில் நேற்றுத் திடீரென ஒரு 'ஹெலிகொப்டர்' வந்திறங்கியது.

'ஹெலிகொப்டரிலிருந்து அவசரமாகக் கீழிறங்கிய நான்கு பேர், சில வரைபடங்களை அங்குள்ளவர்களிடம் காட்டி விசாரணை நடத்திவிட்டு விரைந்துவிட்டனராம்.

அந்த வரைபடங்கள் பல்வேறு வீதிகள் பற்றியதாக இருந்ததாம்.

இந்த மர்ம 'ஹெலிகொப்டர்' குறித்து முழு அளவில் இப்பொழுது விசாரணை நடைபெறுகிறது.

# ராஜீவ் அவசர அழைப்பு:

# தீவிரவாத குழுக்கள் டில்லி செல்லுமா?

(புதுடில்லி)

**இலங்கை இனப்பிரச்னை தொடர்பான திம்பு பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தி சுமுகமான ஒரு தீர்வைக் கண்டறிவதில் இந்திய அரசு புதிய வழிகளைக் கையாண்டுவருவதாக புதுடில்லியில் அரசியல் அவதானிகள் நேற்று கருத்து வெளியிட்டனர்**

இதன் ஓர் அம்சமாகவே தமிழ்த் தீவிரவாதக்குழுக்களின் தலைவர்களை அல்லது இக்குழுக்களின் மிகமுக்கியமானவர்களை டில்லிக்கு அழைத்து நேரில் கலந்தாலோசிக்க பிரதமர் திரு. ராஜீவ்காந்தி துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்று மேற்படி அரசியல் அவதானிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

திம்புவிலிருந்து தீவிரவாதக் குழுக்களின் சகல பிரதிநிதிகளும் மற்றும் இலங்கை அரசின் பிரதிநிதிகளும் சென்னை சென்று விட்டனர்.

சிதம்பரமும் திரு இரா.சம்பந்தனும் தங்கியுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கமும் இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு ரொமேஷ் பண்டாரியும் ஒரே விமானத்தில் புதுடில்லி வந்துள்ளனர்.

திம்புவில் இப்பொழுது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு எம் சிவ... இந்தியப் பிரதமர் திரு.

(8-ம் பக்கம் பார்க்க)

## ரயில் இன்று ஓடும்

(கொழும்பு)

கொழும்பு - காங்கேசன்துறை பகல் ரயில் சேவை இன்று தொடக்கம் வழக்கம்போல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (பெ மா.)

## புதிய யோசனை: 5 வலயங்கள்?

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக இலங்கை அரசு சமர்ப்பித்திருக்கும் புதிய யோசனைகளில்; மாவட்டம், மாகாணம் மறைவு பெற்று 'வலயங்கள்' இடம் பெற்றுள்ளனவா?

முழுஇலங்கையையும் ஐந்து வலயங்களாகப் பிரிப்பது தொடர்பான யோசனை புதிய 'பட்டியலி'ல் இடம்பெற்றிருப்பதாக புதுடில்லியில் பலமாகக் கூறப்பட்டது

## இந்தியப் பாராளுமன்ற இரு சபைகளும் கவலை

(புதுடில்லி)

இலங்கையில் கடந்த சில நாட்களில் சுமார் 500 தமிழர்கள் கொலைசெய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக இந்தியப் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் நேற்று பெரும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜ்ய சபாவில் நேற்று

(8-ம் பக்கம் பார்க்க)

## அடகு கடையில் ரூ. 3 லட்சம் நகை கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள அடகு கடையொன்றில் நேற்று முன்தினமிரவு இனந்தெரியாதவர்களினால் சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான அடகு நகைகள் கொள்ளையடிக்கப்பட்

(8ம் பக்கம் பார்க்க)

## "தமிழர் கொல்லப்படும்போது 3ம் கட்டப் பேச்சு சாத்தியமில்லை"

### ஈ. தே. வி முன்னணி கூறுகிறது

(சென்னை)

"'திம்பு' பேச்சுவார்த்தைகளில் மீண்டும் கலந்து கொள்வது, இலங்கையில் ஏராளமாக கொல்லப்பட்டு வரும் தமிழ் மக்களுக்கு செய்யும் மிகப்பெரியதோர் துரோகமாகும்" என்று ஈழம் தேசிய விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

"வவனியாவிலும், திருகோணமலையிலும் ஏராளமான தமிழர்கள் கொல்லப்பட்டிருப்பதினால் உருவாகியுள்ள வெறுப்பு சூழ்நிலை 3வது கட்ட பேச்சுவார்த்தைகள் தோன்றுவதற்கு ஏற்றதாக

(8 ம் பக்கம் பார்க்க)

## நல்லூர் உற்சவம் —

## உட்பிரகார திருவிழா மட்டும் நடைபெறும்!

(கல்வியங்காடு)

நல்லூர்கந்தசுவாமி கோவில் உற்சவம் இன்று காலை 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தினமும்இரவுத்திருவிழாக்கள் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி 6 மணிக்குள் முடிவடைந்து விடும்.

(8-ம் பக்கம் பார்க்க)

## லோங்கோவால் சுடப்பட்டார்!

(புதுடில்லி)

அகாலிதள் தலைவர் சன் ஹர்சன்சிங் லோங்கோவால், இனந்தெரியாத நபர்களினால் நேற்றுச் சுடப்பட்டார்!

கட்சி ஊழியர் கூட்டமொன்றில் பேசிக்கொண்டிருக்கையில் இந்தச் சூட்டுச்சம்பவம் இடம்பெற்றது

நேற்றிரவு கிடைத்த கடைசிச்செய்திகளின்படி அவர் ஆபத்தான கட்டத்தை கடந்துவிட்டதாகத் தெரியவருகிறது.

## ராஜீவிடம் 'வீடியோப்படம்' கையளிப்பு

(சென்னை)

இலங்கையில் இதுவரை தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டது மற்றும் தமிழ் மக்களின் உடைமைகள்

(8-ம் பக்கம் பார்க்க)

சுழிபுரம்

திருமதி வை. இராசசுந்தரம் பரிபூரணத்தின்

## பணிவான வேண்டுகோள்

எனது கணவன் கடத்தப்பட்டு இன்றுடன் இரு வாரங்கள் ஆகின்றன இரண்டு கடிதங்கள் எனக்கு கணவரின் ஒப்பத்துடன் மட்டும் கிடைத்துள்ளன, இவற்றில் பல முரண்பாடுகள் உள்ளன எனது மனநிலையில் சம்பந்தப்பட்டவர்கள் இருந்தால்தான் அவர்களுக்கு எனது நிலை தெரியும் ஒவ்வொரு வினாடியும் நான் படும் அவஸ்தையை நேரில் வந்து பார்த்தால் தான் என்நிலையை அவர்கள் நன்கு அறிவார்கள்

எனது கணவன் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ தமது கைப்பட எழுதிய கடிதம் ஒன்றை எனக்கு கிடைக்கச் செய்யுங்கள். அவரது உள்ளூர் வெளியூர் வங்கிநிலை பற்றி விபரம் அறிய எத்தனிப்பவர் யாராய் இருப்பினும் என்னையும் வைத்து விசாரணை செய்து கொள்ளுங்கள். என்கணவனை எனக்கு ஒருமுறை காட்டுங்கள் இயக்கமாவது கடத்தியவர்களாவது இவ் வேண்டுகோளை ஏற்று எனக்கு உதவி செய்யுமாறு பணிவுடனும், மன்றாட்டத்துடனும் வேண்டுகின்றேன்.

இங்ஙனம்

திருமதி வை. இராஜசுந்தரம் பரிபூரணம்,
சுழிபுரம். [158] 20-8-85.

## இருப்பெடுப்பின் எதிரொலி —

## நல்லூர் ப. நோ. கூ. ச. நெறியாளர் கூட்டாக ராஜினமா!

(ஐ சண்முகலிங்கம்)

நல்லூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவரும் இயக்குநர் சபை 6 உறுப்பினர்களும் திடீரென நேற்று ராஜினமா செய்துள்ளனர்

நல்லூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு சு. பசுபதியும், சங்க இயக்குநர் சபை உறுப்பினர்களான திரு. கா. பாலசுப்பிரமணியம் [சங்க உபதலைவர்], திரு க சுந்தரலிங்கம், திரு இ போ. குமாரசுவாமி, திரு. பூ க இராசரத்தினம், திரு. இ. தனபாலசிங்கம், திரு சு. விஜயகுமாரன் ஆகிய 6 பேர்களும் தமது இயக்குநர் பதவியை ராஜினமாச் செய்து கொள்வதாக யாழ். பிரேஷ் - கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு அறி

(8-ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### பயிற்சி

மூன்று வருட மருத்துவ தாதிப் பயிற்சி ஆங்கிலமொழி மூலம் எதிர்வரும் ஆவணி மாதம் 30ம் திகதி (30-8-85) ஆரம்பமாகவுள்ளது: குறிக்கப்பட்ட தொகையினரே அனுமதிக்கப்படுவர். நேரில்வந்து பதிவுசெய்துகொள்ளவும். அதிபர், உயர்கலைக் கல்லூரி, 73, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (128)

## தேவை

இனிப்புகள் தயாரிக்கும் கைமெசின் அச்சுகளுடன் தேவை. தொடர்பு: கு. விக்கின ராஜா, மே/பா. செ. இராஜகோபால், ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. 157

கிரைண்டிங் மில்லில் அனுபவமுள்ளவர்கள் தேவை. நேரில் வரவும். மஞ்சு கிரைண்டிங் மில், புளியங்கூடல் சந்தி, ஊர்காவற்றுறை. 146

இந்தியன் மை மூலம் மிக அழகாக எழுதக்கூடிய ஒருவரின் சேவை தேவை. சனி அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் மணித்தியால அடிப்படையில் வேலை செய்யலாம். பாடசாலை மாணவனும் விண்ணப்பிக்கலாம். கடிதமூலம் தொடர்பு கொள்க: பொறியியல் கல்வி நிலையம், 22, ராமையா செட்டியார் லேன், யாழ்ப்பாணம். 154

## விற்பனைக்கு

9 மாத சினையுள்ள தினசரி 15 போத்தல் பால் எடுக்கக் கூடிய நல்ல இன பசுமாடு விற்பனைக்குண்டு: தொடர்பு: 99, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். 156

வடலியடைப்புப் பண்டத்தரிப்பு பூம்பதிவீதியில் இரண்டு பரப்புக்காணியில் மூன்றுபக்க மதில், தனிக்கிணறு, தண்ணீர் தாங்கி, மின்சாரவசதியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. நித்தியானந்தன், ''காமேஸ்பதி'', வடலியடைப்பு, பண்டத்தரிப்பு 133

1 நாய் குஞ்சுகள் விற்பனைக்கு தேவைப்படுவோர் உடன் தொடர்புகொள்ளவும். இரத்தினமாளிகை, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். நா. ஸ்ரீதரன், தெணியம்பை, வல்வெட்டித்துறை. (141)

மினி சினிமாவுக்கு உரிய 45 யைப் கதிரைகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- செ. கோபாலு, மெயின்வீதி, சுன்னாகம். 57

## மணப்பந்தல்

அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றில் கடமை புரியும் போதிய வருமானமுள்ள கண்ணியமான ஒருவருக்கு 27 வயதுக்கும் 33வயதிற்கும் இடைப்பட்ட உயர் இந்து வேளாள குடும்பத்தைச்சேர்ந்த செவ்வாய் தோஷமற்ற மணமகள் தேவை அண்மையில் எடுத்த போட்டோவுடன் சாதகக் குறிப்பையும் மற்றும் விபரங்களையும் அனுப்பிவைக்கவும். போட்டோ திருப்பி அனுப்பப்படும். விளம்பர இல. 144, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 144

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

சிறுவிளான் சேனாதிராசா இம்மானுவேல் மேரி யோசேப் என்பவரின் மரணசாதனம் எழுதப்பட்ட சொத்துக்களின் விடயத்தில், மரியவாசா, இளவாலை.

—மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } ரி/66

மேரியோசேப் கைம்பெண் லூட்ஸ் மேரி திரேசா, மரியவாசா, இளவாலை.

—மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் 18ம் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1985-ம் ஆண்டு ஆவணி மாதம் 6-ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி,

ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

வரைவு:
மு யோககுமார்,
மனுதாரின் சட்டத்தரணி.
34

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனமின்றி மரணித்த இல. 37, நக்கா ஒழுங்கை, சுண்டிக்குளியைச்சேர்ந்த இளையதம்பி ஜேம்ஸ் ஜோசையா மற்புரசிங்கம் இராஜரத்தினம் அவர்களின் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட விடயத்தில்

—மரணித்தவர்

இராஜமலர் இராஜரத்தினம்
ஆழ்வாப்பிள்ளையின் மகள்
இல. 57, நக்காஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

—மனுதார்

எதிர்

இல: தத்துவம் /T3899

1. வின்ஸ்ரன் தேவராஜன் இராஜரத்தினம்,
2. வெஸ்லி கருணராஜன் இராஜரத்தினம்,
3. ரேனுல்ட்சத்தியராஜன் இராஜரத்தினம்,
4. டுசன் கருணராஜன் இராஜரத்தினம், (பராயமற்றவர்)

இவரின் வழக்குப் பாதுகாவலர் மேற்படி 3-ம் எதிர்வாதி மூலம் எல்லோரும் இல: 57, நக்கா ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

—எதிர்வாதிகள்

மேற்குறித்த இலக்கங் கொண்ட தத்துவ வழக்கு மேற்காணும் இறந்தவரின் மரணசாதனமெழுதாத சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இந்த நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரும் 1985-ம் ஆண்டு 9-ம் மாதம் 20-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985-ம ஆண்டு ஆடி மாதம் 5-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

கு. குலசிங்கம்,
பதிவாளர்,

ந. நந்தகுமாரன்,
மனுதாரின் சட்டத்தரணி.
26

## வரைவுள்ள நெடுந்தீவு பல. நோ கூ. சங்கம் அறிவித்தல்

1. வெற்றுச் சாக்குத் தொகை: 1987
2. விண்ணப்பப்படிவம்: ரூபா 5/-
3. மீளளிப்பு வைப்புப் பணம்: ரூபா 300/-
4. முடிவுத்திகதி: 05-09-85 நண்பகல் 1-00 மணி

கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்கு'' எனக் குறிப்பிட்டு தலைவர், நெடுந்தீவு பல நோ. கூ. சங்கம், நெடுந்தீவு என்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(ஒப்பம்)

இரா. தர்மலிங்கம்,
பொதுமுகாமையாளர்;
நெடுந்தீவு
பல. நோ. கூ. சங்கம்,
நெடுந்தீவு.
17-08-85. 153

## முழுநேரக்கல்விப்பட்டப்பின் டிப்புளோமாவிற்குத் தனியார் பாடசாலைகளிலிருந்து 1985 / 86 ஆம் கல்வியாண்டுக்கான விண்ணப்பங்கள் கோரல்

தனியார் பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து கல்விப்பட்டப்பின் டிப்புளோமாவிற்குத் தேர்வுநாடிகளைச் சேர்த்துக்கொள்வதற்குவிண்ணப்பங்கள் செப்ரெம்பர் 15ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இப்பயிற்சிநெறியின் காலம் ஓராண்டாகும்.

விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாக இருப்பதுடன், ஆசிரியசேவையில் அல்லது இலங்கைக் கல்விச்சேவையில் பட்டதாரி ஆசிரிய நியமனம் பெற்றுக் குறைந்தபட்சம் மூன்றுண்டுச் சேவையைக் கொண்டவராகவும் அல்லது ஐந்தாண்டுச்சேவையில் மூன்றுண்டுகளைப் பட்டதாரி ஆசிரியராகக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களையும் ஏனைய விபரங்களையும் பெற விரும்புவோர் நிதிக் கிளையில் ரூபா 10/- செலுத்திய பற்றுச் சீட்டினைக் கல்விக்கிளை உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்தும், தபால் மூலம் பெற விரும்புவோர், நிதியாளர், யாழ் பல்கலைக்கழகம் என்ற பெயரிற் பெற்ற ரூபா 10/-ற்கான காசுக்கட்டளையுடன் 9''X6'' அளவுள்ள சுயமுகவரியிட்ட ரூபா 4-60க்கான முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறையினைப் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பியும் 26-08-85 முதல் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
19-08-85. 152

## ஊழல் பற்றி சுவரொட்டி

[வேலணை] சிலான பெரிய அளவில் ''மக்கள்சேவை என்ற பெயர வேலணை வங்களாவடிச் சந்தியில் மக்களின் சொத்துக்களை யில் சுவரொட்டி ஒன்று ஒட்குறையாடுவதா''என்ற தலைப் (7-ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுப் பிரயாணங்கள்

பிரான்ஸிற்கு விசாவுடன் செல்ல விரும்புகிறீர்களா?
மத்திய கிழக்கு நாடுகளில் பணிப்பெண்கள்,
தொழிலாளர், மெக்கானிக், மேசன்,
மரவேலையாளர் போன்ற தொழில் பெற்றுச்
செல்ல விரும்புகின்றீர்களா?
பிரயாண வசதிகள் உடன் செய்துகொடுக்கப்படும்.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**ஷாஹி ஷீபாஸ் ஏஜென்ஸீஸ்**

125, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
130

## யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை

### ஆகஸ்ட் 1986 மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம். பாடத்திட்டம் முற்றும் மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 9-9-85ல் ஆரம்பமாகின்றன.

பல்கலைக்கழக அனுமதிக்கு எமக்கூடாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் அநேகர் ஒவ்வொரு வருடமும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இது எமது திறமைக்குச் சான்றாகும்.

அதிபர்,
376, பிரதானவீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(4983) தொலைபேசி எண்: 22617

## 9-வது வருட நினைவஞ்சலி

அமரர் இ. செல்லையா
(சன்லைட் றைஸ்மில் உரிமையாளர்)



மலர்வு:
30–5–1914

உதிர்வு:
30–8–1976

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(100)

## முதலாண்டு நினைவஞ்சலி

திருமதி அழகம்மா முருகுப்பிள்ளை



தோற்றம்:
31–7–1921

மறைவு:
31–8–1984

திதி
21–8–1985

தூண்டாமணிவிளக்காய் ஒளிவீசி
காத்துவந்த அன்புத்தெய்வமே
உங்கள் ஆன்மா இறைவனடியில்
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புக்கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நந்தாவில், கொக்குவில். (148)

## லெபனன் முஸ்லிம் பகுதியில்
# மோட்டார்கார் குண்டு வெடிப்பில்
# 30 பேர் பலி; 80 பேர் காயம்!

## அதிபர் ஜமாயல் கவலே!!

பெய்ரூட், ஆக 20

பெய்ரூட்டில் நேற்று இடம்பெற்ற இரு மோட்டார்கார் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 30 பேர் கொல்லப்பட்டனர் 80 பேர் காயமடைந்தனர். பெய்ரூட்டில் முஸ்லிம்கள் அதிமாக வாழும் பகுதியொன்றிலேயே இக் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்தன

கடந்தவாரம் இதையொத்த மோட்டார்கார் ண்டுவெடிப்புகள் லெபனனில் கிறிஸ்தவர்கள் அதிகமாக வாழும்பகுதிகளிலும் இடம்பெற்றன அவற்றில் பலர் கொலலப்பட்டதும் குறிப்பிடத்தக்கது

எனவே இச்சம்பவங்களுக்குப் பதிலடியாகவே முஸ்லிமபகுதிகளில் நேற்று குண்டுவெடிப்புகள் நிகழ்ந்திருக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டது.

லெபனன் ஜனாதிபதி அமின் ஜமாயல் இச்சம்பவங்களை வன்மையாகக் கண்டித்திருப்பதுடன், இவைகுறித்துக் கவலையும் வெளியிட்டுள்ளார்.

இத்தகைய வன்முறைகள் லெபனனை மீண்டும் பயங்கர இரத்தக்களரிக்கு இட்டுச்செல்லும் என்று அவர் எச்சரித்துள்ளார்

இதேவேளை இவ்வன்முறைகளுக்கு இஸ்ரேலே பொறுப்பாகும் என்று லெபனன் தேசிய கூட்டரசாங்கத்திலுள்ள முஸ்லிம் பிரிவுத் தலைவர்கள்கருத்து வெளியிட்டனர்.

சிரியாவின் உதவியுடன் லெபனனில் மேற்கொள்ளப்படும் சமரச முயற்சிகளைப் பாழாக்கும் வகையிலேயே இஸ்ரேல் இவ்வன்முறைகளுக்குப் பின்னணியில் இயங்குகின்றது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (கி)

## பெரும்பான்மை பலத்துடன் ஈரான் புதிய ஜனாதிபதி!

தெஹ்ரான், ஆக. 20

ஈரானிய ஜனாதிபதியாக அலி ஹமெனி அதி பெரும்பான்மை பலத்துடன் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஈரானின் மொத்த வாக்காளர் தொகை 140 லட்சமாகும். இதில் 120 லட்சம் வாக்குகளை இவர் பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட கஷானி என்பவர் 40 லட்சத்துக்கும் சற்றுக் கூடுதலான வாக்குகளையேபெற்றார்.

ஜனாதிபதி அலிஹ் மெய்னி இரண்டாவது தடவையாக ஈரானின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## "இலங்கை மக்களுக்கு தொடர்ந்து உதவ நோர்வே விருப்பம்"

(சுண்டுக்குளி)

"லயன்ஸ் கழகம், சர்வதேச ரீதியில் இயங்கும் ஒரு பெரிய ஸ்தாபனம். இந்த ஸ்தாபனம் சர்வதேச ரீதியில் இயங்குவதால் எல்லா மக்களுக்கும் சேவை செய்யக் கூடியதாக உள்ளது. இக்கழகம் தொண்டு தோழமை என்ற இரு தூண்களின் மீது நிர்மாணிக்கப்பட்ட கட்டடமாகும் லயன்ஸ் என்ற ஆங்கிலச் சொல்லின் எழுத்துக்களைக் கொண்டதான விடுதலை விவேகம் தமது நாட்டுப் பாதுகாப்பு என்ற கொள்கை வசனம் பிரகடனப் படுத்தப் பட்டுள்ளது. இக்கழகத்தின் நோக்கம் என் கடன் பணி செய்வதே என்று சொல்லலாம்"

இவ்வாறு நவாலி தெற்கு கிராம அபிவிருத்திச்சபையின் விசேட செயற்குழுக் கூட்டத்தில் விசேட விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக சர்வதேசத் தொடர்புக் குழுத்தலைவர் லயன்ஸ் இ. விஜயரத்தினம் கூறினார்.

நவாலி சென்பீற்றர்ஸ் சனசமூக நிலைய மண்டபத்தில் கிராம அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. டபிள்யூ என். தேவகடாட்சம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. விஜயரத்தினம் தொடர்ந்து உரையாற்றுகையில் நான் நோர்வே விஜயத்தின் போது அத்தேச மக்களை சந்தித்து உரையாடியபோது அவர்கள் இலங்கை மக்களுக்கு தொடர்ந்து உதவி செய்வதற்கு விருப்பமாகவுள்ளதை அறியக் கூடியதாக இருந்தது. என்றார்.

இக்கூட்டத்தில் நவாலித் துறையை அபிவிருத்தி செய்து தருமாறு நவாலி கிராம அபிவிருத்திச் சங்க மூலம் ஒரு மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது.

## நச்சுவாயு வெளியேற்றம்:
# மகாராஷ்டிரா, ம. பிரதேஷில் நூற்றுக்கணக்கில் பாதிப்பு

புதுடில்லி, ஆக. 20

இந்தியாவில்இரசாயன நச்சுவாயு அச்சுறுத்தல் தொடர்ந்தும் இடம்பெறுகிறது. நேற்று மத்திய பிரதேஷிலும், மஹாராஷ்டிராவிலும இதனால் பலர் பதிப்படைந்துள்ளனர்.

மத்திய பிரதேஷின் குவாலியார் மாவட்டத்தில் நேற்று தனியார் கம்பனியொன்றிலிருந்து 'குளோறின்' வாயு வெளியேறியது. இதனால் 125 பேர் பாதிப்படைந்தனர். இவர்களில் 19 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் சிகிச்சையின் பின்னர் வீடு செல்ல முடிந்தது.

மஹாராஷ்டிர மாநிலத்திலும் கல்யான் என்ற இடத்தில் இரசாயன ஆலையொன்றில் 'குளோறின்'வாயு பீப்பா ஒன்றிலிருந்து வெளியேறியது. இதனால் அத்தொழிற்சாலையில் 30 ஊழியர்கள் பாதிக்கப்பட்டனர்

இவர்கள் தமக்கு தலைச்சுற்று, மயக்கம் போன்ற அசௌகரியங்கள் ஏற்பட்டதாகவும்,பார்வைமங்கலாக இருந்ததென்றும் முறையிட்டனர்.

## உலகச் செய்திகள்

## ✶ பிரிட்டனிலுள்ள 1,500 தமிழ் அகதிகள்:
# 160 பேரின் மனுக்கள் அங்கீகரிக்கப்பட்டது
# 'அகதிகள்' அந்தஸ்து வழங்கப்பட்டது!

(லண்டனிலிருந்து எஸ். எஸ். குஹநாதன்)

லண்டனிலுள்ள அகதிகள் எவரையும் உடன் திருப்பி அனுப்புவதில்லை என்று பிரிட்டனின் ராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனுக்கு வந்துள்ள சுமார் 1500 தமிழ் அகதிகளை அவர்களுடைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டாலும் உடன் கொழும்புக்கு அனுப்புவதில்லை என்று பிரிட்டன் தீர்மானித்துள்ளது.

இதுவரை 160 தமிழர்களின் விண்ணப்பங்கள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டு 'அங்கீகரிக்கப்பட்ட அகதிகள்' அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. ஏனையோரின் விண்ணப்பங்களில் சில நிராகரிக்கப்பட்டு விட்டன ஏனையவை தொடர்ந்து பரிசீலிக்கப்பட்டு வருகின்றன

விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டவர்கள் மீண்டும் மேன்முறையீடு செய்யவும் அனுமதிக்கப்படுகிறது.

தமிழ் அகதிகளுக்கு சட்ட ஆலோசனைகளை பிரிட்டனின் குடிவரவு ஆலோசனை சேவை நிறுவனமும் இங்குள்ள தமிழர் நிறுவனங்களும் செய்து வருகிறது

## பாலர் ஆசிரியர் பரீட்சையில் சித்தி

(யாழ்ப்பாணம்)

பாலர் ஆசிரியர் சங்கம் நடாத்திய பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி 1984ல் பயிற்சி பெற்று பாலர் ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் விபரம்:

செல்வி மா. சிவஸ்தனி [யாழ்ப்பாணம்], செல்வி பா. லலிதாம்பிகை (ஆனைக்கோட்டை), திருமதி சி அருள் வேல்நாயகி (மல்லாகம்). செல்வி மா. கலாவதி (நல்லூர்), செல்வி வசந்தராணி [சங்கானை] செல்வி இ தவயோக லக்சுமி [சுண்டுக்குளி], செல்வி அ.பிறேமா [ஏழாலை], செல்வி தெ கலாநிதி [யாழ்ப்பாணம்], செல்வி இ சுகந்தி (மானிப்பாய்), செல்வி ச. ராகினி (கைதடி), செல்வி தி. சாந்தினி (வட்டுக்கோட்டை), செல்வி ந சுமதி [ஏழாலை], செல்வி சி. லதாளினி[கைதடி] செல்வி மு நிர்மலா [யாழ்ப்பாணம்], செல்வி இ ரவித்தா (உடுவில்), செல்வி உ நளாயினி (உடுவில்), செல்வி சி நளாயினி(கைதடி). செல்வி ம நிர்மலா (திருகோணமலை), செல்வி த. சுகந்தி நல்லூர்), செல்வி த. கேதாரகௌரி (கட்டுவன்).

## "பூட்டான் பேச்சு குறித்து ராஜீவ் மிகுந்த அக்கறை"
### ராஜ்ய சபையில் வி. பி. சிங்

புதுடில்லி, ஆக 20

"பூட்டானில் இலங்கை இனப்பிரச்னை குறித்த தீர்வு விடயத்தில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திமிகுந்த அக்கறைகொண்டுள்ளார்" என்று இந்திய நிதியமைச்சர் திரு. விஸ்வநாத் பிரதாப்சிங் தேரிவித்துள்ளார்.

நேற்று ராஜ்பசபையில் இலங்கை விவகாரம் குறித்து முக்கியமாகப் பிரஸ்தாபிக்கப்பட்டது. அப்போது அங்கு பேசியபோதே அதன் தலைவரான திரு. வி. பி. சிங்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. சிங் மேலும் கூறியதாவது:

"இலங்கை இனப்பிரச்னை குறித்து பூட்டான் பேச்சுக்களில் திரு ராஜீவ் காந்தி அதிக அக்கறைகொண்டுள்ளார்.

இப்பேச்சுக்களை தொடர்ந்து நடத்துவதற்கும், இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்குமான இந்தியாவின் ஒத்துழைப்பு சகல வழிகளாலும் தொடர்ந்து வழங்கப்படும். இதற்கென இந்தியா அதன் ராஜதந்திர நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டுவருகிறது" என்றார்.

ராஜ்யசபையில் இலங்கை விவகாரத்தை அ. தி. மு. க. உறுப்பினர் ஆர். மோகனரங்கம், தி மு க. உறுப்பினர் தங்கபாலு ஆகியோர் முன்வைத்தனர்.



இதேவேளை இந்திய வெளியுறவு இணைச்செயலாளர் திரு. ரொமேஷ்பண்டாரி பூட்டான் நிலவரங்களை நேற்று திரு. காந்தியிடம் விளக்கினார்.

## பாக் எல்லையில் விமானத் தாக்குதல்

இஸ்லாமாபாத், ஆக. 20

பாகிஸ்தானின் எல்லைப் பகுதியில் ஆப்கானிஸ்தான் விமானங்கள் நேற்றுத் தாக்குதல் நடத்தின இதில் எட்டுப் பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர். 12 பேர் காயமடைந்தனர்.

இவ் விமானத் தாக்குதல் குறித்து பாகிஸ்தான் அரசாங்கம் ஆப்கானிஸ்தான் மீது கண்டனம் வெளியிட்டுள்ளது

### மணிவாக்கு

சுற்றவர் விழுங்கும் கருணையாளன்
மற்றவரறியா மாணிக்கமாமலை
சிற்றறிவுடையார் தேருச்செல்வன்
நற்றவர் வணங்கும் நல்லூரானே:
— சிவயோகசுவாமிகள்

# நமது நோக்கு

## பதவி கவிழ்க்கும் பரீட்சைகள்

'குடைநிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடைமெலிந்து ஓரூர் நண்ணினும் நண்ணுவர்'.

இதனை நாம் எங்கள் ஊரிலேயே காண்கின்றோம் என்றால் அது அவ்வளவு பொருத்தமற்றது.

பெரும் பதவியிலிருந்தவர்கள்; நாட்டை அரசனைப் போல், ராணியைப்போல் ஆண்டவர்கள் சதி மூலம் பதவியிலிருந்து ஆட்சியிலிருந்து கவிழ்க்கப்படுவதை சுதந்திர இலங்கை இன்னும் காணவில்லை.

சதிகள் எங்கும் எப்போதும் நடைபெறுகின்றன. அவை அவ்வளவு தூரம் நிறைவேறுவதில்லை. ஜனநாயக முறையில் ஆட்சி இழந்தோர், இன்னும் குஞ்சரம் ஊரும் நிலையிலிருப்பதும், மீண்டும் ஆட்சிக்கு வர முயல்வதும் இந்த அரசியல் முறையின் அழகான அம்சம்.

சதிகள் நிறைவேறுவதற்கு இன்று ஆபிரிக்கநாடுகளும், லத்தீன் அமெரிக்க நாடுகளே போட்டியெனலாம்.

இன்று உகண்டாவில் நடைபெற்றதே சூடானிலும், வேறு பல ஆபிரிக்க நாடுகளிலும் நடைபெற்ற சதிப்புரட்சி ஆட்சிக்குவரும் தலைவர், எந்த நாட்டில் தஞ்சம் அடையலாம் என்ற முன்ஆயத்தம் செய்யவேண்டிய அவசியம் உண்டு.

கடந்தமாதம் பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி மில்டன் ஒபேட்டோ உடனடியாக கென்யாவுக்கு தப்பி ஓடினார். இன்று ஸாம்பியா அரசு மனிதாபிமான அடிப்படையில் அடைக்கலம் அவருக்கு அளித்துள்ளது.

மனிதாபிமானம் என்பது சர்ச்சைக்குரியது, நாட்டைச் சூறையாடி மக்கள் நலனை தனது அதிகாரவேட்கை என்னும் தீயில் ஓமமிட்டு சதிக்குள்ளாகும் அரசன், தன் உயிரைத் தப்பவைக்கும் உரிமையுடையவன். நடைமெலிந்து ஓரூர் நண்ண வேண்டியவன், மனிதாபிமானத்துக்கு மரணசாதனம் எழுதிய கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டில் கடும் புலி வாழும் காடு நன்றே என்பதை நாம் மறத்தலாகாது.

உகண்டாவில் நடந்து வரும் சதிகள் மக்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்துவதில்லை.

கடந்த 15 வருடங்களில் இன்று இரண்டாவதுமுறை ஆட்சியிலிருந்து கவிழ்க்கப்பட்டவர் ஜனாதிபதி மில்டன் ஒபேட்டோ. முதலாவது தடவை அவரைக் கவிழ்த்தவர் உலகம் நன்கறிந்த முன்னாள் ஜனாதிபதி இடிஅமின்.

இன்று யாழ்ப்பாணத்திலேயே இடிஅமின் ஒரு காரணப்பெயராகத் திகழ்கிறது. சுமார் 3 லட்சம் மக்களை தமது ஆட்சிக் காலத்தில் கொன்று குவித்த இந்த இடிஅமின் இன்று நடந்த புரட்சியை வரவேற்றது மல்லாமல், தம்முடைய சேவை எந்த நேரமும் தாய்நாட்டுக்கு கிடைக்குமென்றும் இன்றைய ராணுவ ஆட்சிக்கு அறிவித்திருக்கிறார்

முன்னர் இடிஅமின் இன்றைய ஆட்சியை கவிழ்த்தது தெரிந்த விடயம். இன்று நடந்தேறிய புரட்சியின் பின்னணி நாட்டு மக்களுக்கோ உலகிற்கோ நன்கு தெரியாது.

ராணுவத்தின் சதியென்றது நிச்சயமாகிவிட்டது; ராணுவத்தை நன்குகநம்பி தமது சீர்திருத்தத்திட்டங்களை அமுலாக்கி வந்த ஜனாதிபதி ஒபேட்டோ இடைநடுவில் விட்ட தவறுகள் குழப்பநிலையை உண்டாக்கியதும், அவரை ஆதரித்த ராணுவம் இரண்டாகப்பிரிந்து, ஜனாதிபதிக்கு எதிரான பிரிவு பலம்பெற்றதுமே இன்றைய புரட்சியின் ரகசியம் என்பது இன்றைய முடிவு.

நாட்டின் அரசியல் ஸ்திரம் குன்றி வந்ததும், ஆட்சிக்கு எதிரான ராணுவ இயக்கம் ஒன்று உருவானதும், பொருளாதாரச் சீர்கேடும், வளர்ந்துவரும் தேசிய கடனும், கடன் கொடுக்கும் ஸ்தாபனங்களின் அவநம்பிக்கையும் இவையாவும் ஜனாதிபதி ஒபேட்டோவின் வீழ்ச்சிக்கு காரணங்கள்.

ஆட்சிக்கு வந்ததும் தம் மாலியன்ற சில சிறந்த திருத்தங்கள் நிறைவேற்றிய போதும் காலம் செல்லச்செல்ல தம்முடைய வர்க்கத்தினரின் செல்வாக்கை வளர்ப்பதில் நாட்டுவிவகாரங்களைத் தொய்யவிட்டார் ஒபேட்டோ.

இவற்றில் உண்மை உண்டானால் சர்வாதிகாரப் போக்கில் ஓடும் ஆட்சி சடுதி மாற்றம் காண்பது ராணுவம் நடத்தும் திருவிளையாடலில் இருக்கின்றது.

தூரஆபிரிக்காவில் தான் இத்தகைய பயங்கர சம்பவங்கள். எங்கள் நாடு ஜனநாயக சோஷலிசநாடு என்று பேரம்பேசி, நாம் ஆறுதலடையலாமா?

உகண்டாவும், இடி அமினும் அங்குதான் உருவாகு மென்பதல்ல எமது மகுடவாசகம் எங்கள் நாட்டின் இன்றைய நிலைமைக்கு மிகப் பொருத்தமானது.

ஆட்சி யார்? எதிரிகள் யார்? ஜனநாயகத்தில் அனுமதிக்கப்பட்ட எதிர்ப்பு எங்கே? இன்று நடைபெறும் 'போரின்' வரைவிலக்கணம் என்ன?

இவற்றின் விடைகள் நாம் வாழும் உலகம் ஜனநாயக சோஷலிச உலகமல்ல என்பதை வலியுறுத்தும்.

## இன்று நல்லைக்கந்தன் திருவிழா ஆரம்பம்

# முத்தமிழால் வைதாரையும் 'வாழவைக்கும் முருகன்

''விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள்
மெய்மைகுன்றா
மொழிக்குத் துணை முருகா
எனும் நாமங்கள்
முன்பு செய்த
பழிக்குத் துணை அவன்
பன்னிரு தோளும்
பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலும்
செங்கோடன் மயூரமுமே''

தோருடல், பழமுதிர்சோலை ஆகிய மலைகளைக் கூறுகின்றார் இப்படை வீடுகளுக்கு பக்தர்களை ஆற்றுப்படுத்தி அனுப்பும் நக்கீரதேவர் ஒவ்வோர் படைவீட்டின் இயல்புகள் யாவும் பண்டைத் தமிழரின் ஒவ்வோர் அங்கத்தின் இயல்புகளைச் சித்தரித்துக் காட்டுவதாகும்.

நக்கீரதேவர் திருமுருகாற்றுப்படை பாடுவதற்கு இறைவனால் அருளப்பட்ட குறுந்தொகைப் பாடலொன்றே காரணமாக இருந்தது பாண்டியனின் பட்டையும் கருத்தையும் கவர்ந்த மனம் எதுவென்று கூறுவார்க்குப் பொற்கிழி வழங்குவதாகப் பாண்டியன் முரசறிவித்தான்: இதனையறிந்த பாணபத்திரன் இறைவனிடம் முறையிட்டபோது இறைவன்

''கொங்குதேர் வாழ்க்கை
அஞ்சிறைத்தும்பி
காமஞ் செப்பாது கண்டது
மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மறிலியற்
செறியெயிற் றரிவை
கூந்தலின்
நறியவும் உளவோ
நீயறியும் பூவே''

என இச்செய்யுளை யாத்து தருமியிடம் அனுப்பினார் பாண்டியன் அவையிலே இச்செய்யுளைப் தருமி பாடிக் காட்டியதும் பாண்டியன் மனமுவந்து பொற்கிழி வழங்கியதைப் பொறுக்க மாட்டாத

(5-ம் பக்கம் பார்க்க)

### புலவர் சி. விசாலாட்சி

என முருக பக்தர் அருணகிரிநாதர் முருகப்பெருமான் துணை செய்யும் இடங்களை மிகவும் பயபக்தியோடும் உருக்கமாகவும் கூறியுள்ளார். அத்தகைய முருகப்பெருமான் தமிழரின் குலதெய்வம் என்று வரையறுத்துக் கூறக்கூடிய சான்றுகள் உள்ளன.

இறைவனால் அருளப்பட்ட மொழிகளில் தமிழும், வடமொழியும் மிகவும் சிறப்பானவையாகும். இருமொழிகளும் சைவசமயத்திற்கும் சமூகத்திற்கும் பெரும் தாண்டாற்றி வருகின்றன. இருமொழிகளும் முருகவணக்கத்தின் பெருமை பற்றி மிகைப்படுத்திக் கூறிய போதிலும், முருகப்பெருமானின் வரலாற்றில் எவ்வளவு தமிழ் போற்றப்படுகிறது என்பதைத் தமிழ்பேசும் ஒவ்வொருவரும், சைவசமயி ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளுதல் அவசியம்.

முருகன் என்றால் இளமை, அழகு முதலிய கருத்துக்களைத் தருகின்ற பதமாகும். முருகன் என்ற பெயரில் தமிழ் எழுத்துக்களின் இனமாகிய மெல்லினம், இடையினம், வல்லினம் ஆகியன இருப்பதைக் காண்கின்றோம். இதனைவிட முருகப்பெருமான் தோற்றத்தில் தமிழ் எழுத்துக்களின் தன்மை பிரதிபலிப்பதைச் சிந்திக்கமுடிகிறதல்லவா?

ஓராறு முகங்களில் காணப்படுகின்ற மூவாறு கண்களும் மெய்யெழுத்துக்களையும் ஈராறு தோள்கள் பன்னிரு உயிர் எழுத்துக்களையும் நினைவுறுத்துகின்றன.

ஒல்காப் பெரும்புகழ் கொண்ட தொல்காப்பியர் தமிழ் நிலத்தை ஐந்திணை நிலங்களாகப் பிரித்து அந்த அந்த நிலங்களுக்குத் தெய்வங்களை வகுத்துள்ளார்.

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி. குறிஞ்சிக்குரிய குமரக் கடவுள் சிறப்பான ஆறு மலைகளில் உறைவதாக நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய நூல்கள்யாவும் சங்க காலத்தில் யாக்கப்பட்டதாக அறிகிறோம். பத்துப்பாட்டின் முதலாவது பாட்டு திருமுருகாற்றுப்படை. இது பத்துப்பாட்டின் முதற்பாடலாகவும், கடவுள் வாழ்த்துப் பாடலாகவும் அமைந்துள்ளது.

இந்தியாவில் மிகப்பெரிய பல மலைகள் இருந்தபோதிலும் நக்கீரதேவர் முருகன் உறைவிடமாகத் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்று

## கிளிநொச்சியில் மகோற்சவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பழமை வாய்ந்த அருள்மிகு கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றவைபவத்துடன் ஆரம்பமாகிறது 28ம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும், 29ம் திகதி இரதோற்சவமும், 30ம் திகதி தீர்த்தோற்சவமும் பதினொராம் நாளான 31-ம்

(5-ம் பக்கம் பார்க்க)

★ இன்று நல்லூர்க் கந்தன் கொடியேற்றம்

## நல்லூர் கந்தவேளே! அமைதிபெற காப்பாய்நீயே



பேர்நல்லூர்ப் பதிமேவும் கந்தவேளே
பக்தர்கள் புடைசூழ உறைகின்றோனே
ஊர்திகழ உளங்குளிர அச்சம் நீங்க
ஊனமுறு வினைகளெலாம் புறந்தே ஓட
பார்திகழ வள்ளிதெய்வ யானையோடு
பாங்குடனே உறைபவனே நின்னையாங்கள்
சீர்திகழக் கொடியேற்று விழாவிலின்று
செய்யகரம் கூப்பியே வணங்குவோமே.

பாரினிலே புகழ்பெற்ற நல்லூரென்னும்
பதிதனிலே குடிகொண்டாய் பக்தர்போற்ற
ஏரினிலே நினக்கு நிகர் நீயேயானாய்
இகல்சூர பன்மாவும் அடிமையானான்
போரினிலே நின்வண்ணம் காட்டிநின்று
புலவர்குழாம் போற்றவே அருளும்செய்தாய்
ஊரினிலே இனப்பூசல் ஓயவில்லை
உளம்தளர்ந்தோம் அமைதிபெற
காப்பாய் நீயே.

நீர்வேலி பண்டிதர் முருகேசு

★ இன்று கிளிநொச்சிக் கந்தசுவாமி கோயில் கொடியேற்றம்

## விழாக்காண்போர் எய்தும் பயன்

நீர்வளம் நிறைந்த ஊராம்
நிலவளம் மிகுந்த ஊராம்
பார்புகழ் கிளிநொச்சிக்கண்
பக்தர்கள் தம்மைக் காக்கும்
சீர்மிகு கந்தன் கோவில்
திருவிழாக் காண்போர்க் கென்றும்
பார்மிசை துன்பம் நீங்கும்
பல்கிடும் இன்பம்தானே.

ஜெயந்திநகர் க இரத்தினசிங்கம்

# முத்தமிழால் வைதாரையும்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நக்கீர தேவர் அப்பாடலின் மீது குற்றம் சாட்டினார். இதனை எம்பெருமான் மறுத்து அப்பாடலின் பொருளை விளக்கி அப்பாடல் சரியானதே என்று வாதாடினார். நக்கீர தேவர் மீண்டும் மறுத்து வாதாட எம்பெருமான் நெற்றிக்கண்ணைக் காட்டினார். நக்கீர தேவர் நெற்றிக்கண்ணை காட்டினாலும் குற்றம் குற்றமேயென்று இறையனார் பாடலுக்குக் குற்றம் சாட்டிய குற்றத்தால் இறைவன் நக்கீர தேவனுக்கு அழல் நோயை அருளினார். முருகன் ஆலயங்களைத் தரிசனம் செய்ய நக்கீரர் புறப்பட்டார்.

இங்கேயும் நக்கீரருக்கு இன்னோர் வினை காத்திருந்தது. முருகன்தல யாத்திரை செய்து கொண்டுவந்த நக்கீரர், ஒரு குளத்தில் மூழ்கி எழுந்து கரையில் இருந்து முருகனைத் தியானம் செய்துகொண்டிருந்தபோது பக்கத்திலிருந்த ஆலமரத்திலிருந்து ஓர் ஆலமிலை நீரில் வீழ்ந்த சத்தம் கேட்டது. நக்கீரர் முருக தியானம் செய்வதை நிறுத்தித் திரும்பிப் பார்த்தார். நீரிலே விழுந்த ஆலமிலையிற் பாதி மீனாகவும், பாதி பட்சியாகவும் மாறி ஒன்றை யொன்று பிடித்து இழுபட்டன. இந்த விந்தையைக் கண்ட நக்கீரதேவர் வாய்விட்டுச் சிரித்தார். உடனே ஒரு பூதம் தோன்றியது. நக்கீரரைத் தூக்கிக் கொண்டு போய் ஒரு பெரிய குகையிற் தள்ளி விட்டது.

நக்கீரர் முருகப் பெருமானை நினைத்து திருமுருகாற்றுப் படையைபக்தியுடன் பாடினார் உடனே நக்கீரர் தேவருடைய தமிழ்ப் பாடல்களும் வேண்டுதலும் முருகனை உருக்கி விடவே முருகப்பெருமான் அப்பூதத்தைக் கொன்றதாக வரலாறு கூறுகின்றது.

நக்கீர தேவர் முருகப் பெருமானின் கருணையை செந்தமிழ் மொழியினால் தேன்போல் பக்திவெள்ளம் ஊற்றெடுக்கப் பாடுகின்றபோது, முருகப் மானின் மூவிரு முகங்களும் செய்கின்ற தொழிலைத் தெள்ளிக் கொழித்தெடுத்த செஞ்சொற் தமிழ்க்கோவை ஆரத்தால் முருகனுக்கே சூட்டிக் காட்டித் தமிழ் மாதாவைக் காக்கின்ற தன்மை ஒவ்வோர் தமிழனையும் உருக்கிவிடுகின்றது.

''மாஇருள் ஞாலம் மறு
-வின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒரு
-முகம், ஒரு முகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தி
-னிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம்
-கொடுத்தன்றே ஒருமுகம்
மந்திர மதியின் மரபுளி
-வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்
-குமே ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏம்
-உற நாடித்
திங்கள் போலத் திசைவிளக்
-கும்மே ஒரு முகம்
செறுநர்த் தேய்த்துச் செல்
-சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொரு
-களம் வேட்டன்றே ஒருமுகம்
குறவர் மடமகள் கொடி
-போல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகை
-யமர்ந் தன்றே''

என முருகப்பெருமானின் மூவிரு முகங்களையும் அவற்றின் தொழிற்பாடுகளையும் நக்கீரதேவர் கூறுகின்றார். இன்னுமோர் இடத்தில் பெருமானே, மாலை மார்ப நூலறி புலவ செருவி லொருவ! பொருவிறல் மள்ள என்று விழிக்கின்றார். எட்டுத்தொகை நூல்களில் ஒன்று பரிபாடலாகும். பரிபாடலில் உள்ள பாடல்களில் ஏழு பாடல்கள் முருகவேளைப் பற்றியவையாகும். பரிபாடலிற் காணப்படும் செவ்வேள் பற்றிய பாடல்களிற் புறப்பொருள் பற்றியனவும் அகப்பொருள் பற்றியனவும் காணப்படுகின்றன.

முத்தமிழ்ச் சங்கம் கூடிய மதுரையம்பதியிலே காணப்படும் திருப்பரங் குன்றத்தை உறைவிடமாகக்கொண்ட முருகப் பெருமான் மண்ணவரையும் விண்ணவரையும் காப்பாற்றிய பெருமைகள் யாவும் பரிபாடலித் செந்தமிழ்ச் சொல்லாவியத்தாற், தீட்டப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது.

முருகப்பெருமான் கடைச் சங்க காலத்தில் இறையனாரகப் பொருளுக்கும் உரைகண்டதாக, இறையனார் அகப்பொருளே சான்று கூறுகின்றது. தமிழில் தமிழ் எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும், காணப்பட்டன. பொருளிலக்கணம் காணப்படவில்லை. இதையறிந்த பாண்டியன் மிகவும் வருந்திப் பொருளிலக்கணம் தரும்படி எம்பெருமானாகிய சொக்கநாதப் பெருமானை வேண்டினான். குறைவிலா நிறைவுடைய எம்பெருமான் பாண்டியனின் குறையும், தமிழன்னையின் குறைபாடுகளையும் தீர்க்கத் திருவுளங்கொண்டார். இதனால் தனது திருக்கரங்களால எவரும் இலகுவில் உணர்த்தற்கரிய செந்தமிழ் மொழியால் இறையனார் அகப்பொருளை உதவினார். இந்நூலைப்பெற்ற பாண்டியன் இந்நூலுக்கு உரைகாணப் பல புலவர்களுடன் கலந்து யோசித்தான் மீண்டும் எம்பெருமானை வேண்டுதல் செய்தான். அப்போது எம்பெருமான் ''புலவர்கள் உரையை எழுதி வாசிக்க யாருடைய உரைக்கு ஊமையாகிய உருத்திரசர்மனின் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பாய்கின்றதோ அவ்வுரையே சிறந்ததென'' அசரீரி வாக்கருளினார்.

பாண்டியன் அவையில் உருத்திரசர்மன் அவதாரமெடுத்த முருகப்பெருமான் கொண்டுவரப்பட்டு அமர்ந்திருந்தார். பல மக்களும் அங்கு குழுமி இருந்தனர். பல புலவர்கள் இறையனார் அகப்பொருளுக்கு உரை வாசித்தார்கள். ஊமையாகிய உருத்திரசர்மன் பேசாது கண்ணீர் உகுக்காது இருந்தார். கடைசியாக நக்கீரருடைய உரை வாசிக்கப்படும்போது ஊமைப் பிள்ளையாகிய உருத்திரசர்மனின் கண்களில் இருந்து மடை திறந்தாற்போலக் கண்ணீர் ஆறுபோலப் பாய்ந்தது. இதனைக்கண்ட பாண்டியன் பரவசம் அடைந்தான்.

மலையும் மலைசார்ந்த நிலமாகிய குறிஞ்சிக்கே உரிய முருகப்பெருமான் தமிழர் வாழும் இடமெல்லாம் கோயில்கொண்டதுடன் நில்லாது தமிழர் மனையிலும் மனத்திலும் உறைந்து காணப்படுகின்றான். வீரத்திலும், செல்வத்திலும், ஞானத்திலும் முருகன் அருள் மிகைபடக் காணப்படுகின்றான்.

முருகன் கலியுக வரதன் என்றும் அழைக்கப்படுகின்றான். கலியுக வரதனாகிய முருகப் பெருமான் தன்னை நினைந்து உருகிப்பாடுவார்க்குத் துன்பம் துடைப்பவனாகையால் பலர் முருகன் புகழைப் பாடித் தம் துயரைப் போக்குகின்றனர். முருகன் புகழைப் பாடியோரில் அருணகிரிநாதர் முதன்மையானவர்.

''முடியாப் பிறவிக் கடலிற்
புகார் முழுதும் கெடுக்கும்
மிடியாற் படியில் விதனப்
படார் வெற்றிவேற்-
பெருமான்
அடியார்க்கு நல்ல பெருமாள்
அவுணர் குலமடங்கப்
பொடியாக்கிய பெருமான்
திருநாமம்புகல்பவரே''

என்று முருகன் நாமமாகிய ''ஓம் சரவணபவ'' என்ற தாரக மந்திரத்தை ஓயாது தியானித்துச் செபித்தால், எத்தொந்தத்துயரும் வந்தடையாதென அழகாக அருணகிரிநாதர் கூறுகின்றார். தேவர்களை வருத்திய குலமாகிய அசுரர் குடியை முருகப்பெருமான் வேருடன் அழிப்பதற்காகத் தேவர்கள் முருகப் பெருமானை வேண்டித்தவமிருந்த வரலாறு இங்கு கூறப்பட்டதைத் தமிழினம் ஊன்றிக் கவனித்தல் வேண்டும.

தமிழினம் வாழத் தேவரின் தவம் வழிகாட்டியாக அமைந்துள்ளது. அன்று முப்பத்து முக்கோடி தேவர்களும்தம்மை வருத்திய அசுரர்படை அழிவதற்காக ஒரே மனத்துடன் ஒரே நேரத்தில் எம்பெருமானை வணங்கி அசுரரின் துயரை ஒழித்தொண்டனர். அத்தேவர்களைப் போலவே தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் ஒன்றுகூடி முருகப்பெருமானை வேண்டுதல் செய்தால் தமிழினத்தை ஒதுக்கும் மாற்றாரின் கொடுமைகள் வெயிலைக்கண்ட பனிபோல மறையுமல்லவா.

யாழ்ப்பாணத்தில் காணப்படும் முருகப்பெருமான் கோவில்களில் நல்லூர் முருகன் கோவில் மிகவும் சிறப்பும் அற்புதமும்கொண்ட ஆலயமாகும். இவ்வாலயம் யாழ்ப்பாணத்தை ஆண்ட யாழ்ப்பாணத் தமிழரசர் காலத்தொட்டு மக்களால் போற்றப்பட்டும் பூசிக்கப்பட்டும் வருகின்றது.

ஆதியில் இவ்வாலயம் மிக சிறிய ஆலயமாகக் காணப்பட்டது; யாரோ ஒரு பெரியவர் சமாதி இருந்த இடமென்றும் அச்சமாதியில் வேலை வைத்துப் பூசித்ததாகவும் பரம்பரைக் கதையொன்று நிலவி வருகின்றது. இக்கோயில் சிறப்பாக அமையத் தமிழ் அரசரைவிட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெரிதும் தொண்டாற்றினார். புராண படனம் ஓதுதல், பிரசங்கம்செய்தல், ஆகம விதிப்படி பூசை செய்தல், வேத மோதுதல் யாவும் ஒழுங்காக நடந்துவந்தன.

ஆலயம் புதுப்பித்துத் தேர்த் திருவிழாவரையும் வேதியர்கள் வேதமோதிஒழுங்காகவும்பக்தியாகவும் முருகப்பெருமானை புகழ்ந்துபோற்றிப்பூசைஇன்றுவரையும் செய்துவருவதை நல்லூர் முருகன் ஆலயம் சிறந்து விளங்க இன்னுமோர் காரணமுண்டு. எவ்வாலயத்திலுமில்லாத சித்தர் பரம்பரை நல்லூர் ஆலயத்தில் ஆரம்பமாகி நல்லூர் என்னும் இடத்தைப் பேரானந்தமளிக்கும் தலமாக்கியுள்ளது. முதல் முதலில் நல்லூர்த் தேரடியில் எப்போதும் தியானமிருந்து வந்த விசர்ச் செல்லப்பாச் சுவாமிகளின் வழித் தோன்றலாக வந்தவரே சிவயோக சுவாமிகளாவர்.

சிவயோக சுவாமிகள் தனது குருவாகிய விசர்ச் செல்லப்பாச் சுவாமிகளை வணங்கினார். முருகப் பெருமானைப் போற்றினார். இதனால் சிவயோக சுவாமிகள் 'நற்சிந்தனைப்' பாடல் பல பாடினார். அந்த நற்சிந்தனையில் நல்லூர் முருகப் பெருமானின் புகழ் மிகையாகக் காணப்படுகின்றன.

பண்டைக் காலத்தில் நல்லூர் யாழ்ப்பாண நகரின் இராசதானியாகவும் தலைநகராகவும் இருந்தது. இன்று நல்லூர் இறைமணங் கமழும் புனித நகராகத் திகழுகின்றது தமிழர் வரலாற்றை விவரிக்கும் தலமாகவும் விளங்கி வருவதைக் காண்கின்றோம்.

இன்று காணப்படும் நல்லூர் ஆலயம் வானளாவு கோபுரங்கள், கோபுரங்கள் நிறைய புராண வரலாற்றுச் சிற்பங்கள் காணப்படுகின்றன மணிக் கோபுரங்கள் நாற்றிசையும் நாதம் பரப்பித் தமிழின் பெருமையைக் காட்டியங்கூறுகின்றன. நித்திய பூசை, நைவேத்திய பூசை, மகோற்சவங்கள் வேதமந்திரங்களோதி ஆகம விதிப்படி நடைபெறுகின்றன.

மூர்த்தி, தலம், தீர்த்தம் இங்கு முறையாக இருக்கின்றன அடியார்கள்மடம், அன்னதான மடங்கள், நல்லைத்திருஞானசம்பந்தர் ஆதீனம் யாவும் முருகன் புகழையும் சைவசமயக் கோட்பாடுகளையும் வலியுறுத்த முருகப்பெருமான் தமிழரின் குலதெய்வமாகவும் இஷ்ட தெய்வமாகவும் இருந்து நல்லருள் சொரிகின்றான்.

---

## கிளிநொச்சியில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திகதி சனிக்கிழமை திருக்கல்யாண விழாவும் நடைபெற்று மகோற்சவம் முடிவுறும்.

நாட்டில் தற்போதைய சூழ்நிலைகளை முன்னிட்டுத் தினமும் இரவு 7 மணிக்கு முன்பாக உற்சவங்களை முடிக்கவும் எளிமையான முறையில் திருவிழாக்களை நடத்தவும் ஆலய பரிபாலன சபையினரும் உபயகாரர்களும் முடிவு செய்துள்ளனர்.

உற்சவகாலங்களில் கிளிநொச்சி திருநெறிக் கழகத்தால் மாலைநேரங்களில் சமயச் சொற்பொழிவுகளும், பஜனை நிகழ்ச்சிகளும் நடத்தப்படவும் உள்ளது.


# St. John's College, Jaffna
AND
# Chundukuli Girls' College, Jaffna.

ADMISSION — 1986

1. Vacancies exist ONLY in the following Classes;- Year One and Year Seven.
2. Children born between 01/02/1980 and 31/01/1981 only will be considered for admission to year One. Birth Certificate should be annexed along with the application.
3. Pupils to be considered for admission to Year Seven should be below the age of twelve on 31/01/1986.
4. Apply before the 13th of September, 1985 on forms available from the respective Schools from the 3rd of September, 1985.
5. Please send stamped addressed long size envelope and Postal Order drawn in favour of the "Principal" for Rs. 20/- per Application Form for year Seven, and Rs. 10/ for Year One.
6. Admission Test (for Year Seven only) will be held at 8-30 a.m. on Saturday the 12th October, 1985.

4951 PRINCIPAL.



# திருமண அழைப்பு

மணமகன்:
## சின்னத்துரை குலசபாநாதன்
B. A. (யாழ்ப்பாணம்)
(சுங்க அலுவலர் கொழும்பு)

மணமகள்:
## சியாமளா கார்த்திகேசு

காலம்:
1985-08 21 புதன் காலை 8-00-9-43 மணி.

இடம்:
ரசிக ரஞ்சனசபா மண்டபம்
(பெருமாள் கோவிலடி) யாழ்ப்பாணம்.

நினைவில் வைத்திருக்கும் அன்புள்ளங்கள் அனைவரையும் அன்புரிமை கொண்டு அழைக்கின்றோம்.

திருமதி
சி. கார்த்திகேசு,
கா. உதயகுமார்,
5, வைமன் வீதி,

திருமதி
கமலா தியாகலிங்கம்,
சு. தியாகலிங்கம்,
18/2, யாழ் வீதி,

யாழ்ப்பாணம். 159



# 20-ம் ஆண்டு நினைவஞ்சலி

## திரு. தம்பிமுத்து நவரத்தினம்
(கதிரவேலு)



மலர்வு:
30-05-1928
உதிர்வு:
31-08-1965
திதி:
21-08-1985

எத்தனை வருடங்கள் சென்றாலும் எம் நெஞ்சை விட்டு அகலா எம் அன்புத் தெய்வமே - உங்கள் ஆத்மா சாந்தியடைய சந்நிதி முருகனைப் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், மற்றும் உறவினர்கள்.
''கமல வாசா'', போக்காலை வீதி, உடுப்பிட்டி. (161)

## முன்னுதாரணர்



ஒரு ஊரினது பெருமை அவ்வூரிலுள்ள மக்களது வாழ்வு, பண்பாடு, கல்வி, சமூகப்பணியீடு பாடுகளாலும் பொலிவுபெறும்; பக்தியுணர் வும், மக்கட்பணியில் பற்றும் இணைந்த பொதுமக்கள் சேவை யில் ஈடுபாடு கொண்டு தமது பெரும் பொழுதைக் கழித்த வர் நயினை நாகநாதர் கண பதிப்பிள்ளை.

1908 ம் ஆண்டு பிறந்த இப்பெரியார் தமது தொழில் கருதி யாழ் நகரிலே தொழில் நிறுவனமொன்றிலே, ஊழிய ராகவும், முகாலமையாளராக வும், ஆலோசகராகவும் ஏறத் தாள ஐம்பது ஆண்டுகள் பணியாற்றினர் பெருநிதிக் கிழார் சி. ச. கந்தையா செட் டியாரின் உதவியோடு நயினை நாகபூசணி அம்மாளுக்கு சித் திரத்தேர் செய்யும் திருப் பணியில் முன்னின்றுழைத் தார்.

நல்லூர் முருகனடியாருக்கு தாகசாந்தி செய்யும் பணியி லீடுபட்ட இவர் உள்ளூர் வளர்ச்சி குறித்தும்- முன் னேற்றங்கருதியும்தமது பாரிய பங்களிப்பினை நல்கினர். நயினைக்குப் போக்குவரத்து, ஆங்கிலப் பாடசாலை அமைத் தல் பணிகளில் முன்னின்று செயற்பட்டார்.

நயினை இரட்டங்காவி முரு கன் ஆலயத்தைப்புதுப்பித்துக் குடமுழுக்குக் கண்டார் 1960ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நயினாதீவு நாகபூசணி அம்மன் 'அமுதசுரபி' அன்னதானசபை ஆரம்பகர்த்தாக்களில் ஒருவ ராக, ஆரம்பகாலமுதல் இற் றைவரை கால்நூற்றாண்டாகக் கண்ணியம் மிக்க பொருளா ளராகவிருந்து கடமைபுரிந்து, சபையைத்தாம் இறக்கும் வரை நிதிவலுவும், அருட் பொலிவும் உடையதாய் மிளி ரச் செய்தார் 1956 தொடக் கம் 1960 வரை நயினை நாக பூஷணி அப்பாள் ஆலயத் தர்மபரிபாலன சபையில் தெரிவு உறுப்பினராக அரும் பணியாற்றினர்.

நெடிய, நேரிய தோற்றங் கொண்ட, குடுமித்தலை சூடிய பெரியார் கணபதிப் பிள்ளை நயினைச்சிறுார்கள் மத் தியில் 'சேவையால் உயர்ந்த உத்தமர்' எனப் புகழ்படுப வர். அனைத்து மக்களுக்கும் முன்னுதாரணராகத் திகழ்ந்த இவரது பொதுப்பணிகள் குறித்த கொள்கைகள் கோட் பாடுகள் என்றென்றும் பிற ருக்கு ஆதரவுமாக இருந்து நல்லபணிகள் பல புரிய உதவு வன என்பது திண்ணம் அன் னாரின் மறைவு பேரிழப்பே யாகும். வாழ்க அவர் நாமம்.

கனகசபாபதி நாகேஸ்வரன்

யாழ். பல்கலைக்கழகம்

# வெளிவாரி பரீட்சை நடத்த அனுமதி கோரியுள்ளது

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழகம் வெளி வாரி மாணவர் தேர்வுகளை நடாத்துவதற்கான அனு மதியை பல்கலைக்கழக மானி யக்குழுவிடம் கோரியுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் செனற்சபையினதும் கலைப் பீடத்தினதும் தீர்மானத்தைத் தொடர்ந்து 1983 ம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் முதன்முத லாக இவ் அனுமதி கோரப் பட்டது. [illegible]

பேராதனைப் பல்கலைக்கழகம் மூன்று மொழிகளிலும் வெளி வாரித்தேர்வுகளை நடாத்து கின்ற காரணத்தால்யாழ். பல் கலைக்கழகமும் வெளிவாரித் தேர்வுகளை நடாத்த வேண் டுமா என்ற கேள்வி மானிய ஆணைக்குழுவினால்எழுப்பப்பட் டது. 1984 ம் ஆண்டு மார்கழி மாதம் பேராதனை பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்பட டவிருந்த வெளிவாரி பட்டத் தேர்வு நிலையமாக இருந்த யாழ்ப்பாணத்தை குறுகிய காலத்தில் ரத்து செய்தமை வெளிவாரிதேர்வுகளுக்கு விண் ணப்பம் செய்த பலருக்கு கஷ்டத்தை ஏற்படுத்தியது நாட்டு நிலைமையால் அத்தரு ணம் அத்தேர்வு எடுக்க முடி யாத நிலைக்கு மாணவர்கள் தள்ளப்பட்டனர்.

மேலும் 1985 ம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில்பேரா தனை வெளிவாரி தேர்வுகளை நடைபெற மாட்டாதெனஅறி விக்கப்பட்டமையைத் தொடர்ந்து இன்றைய நாட்டு நிலைமை போன்ற காரணங் களை முன்வைத்து பலர் கை யொப்பமிட்ட விண்ணப் பம் துணைவேந்தர் திரு. எஸ். வித்தியானந் தனிடம் கையளிக்கப்பட்டது. இவ்விண்ணப்பம் துணைவேந் தரினால் சிபார்சு செய்யப்பட்டு மானிய ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அனுமதி கிடைக்கப்பெறின் க. பொ. த உயர்தர வகுப்பில் சித்தியடைந்தும் உயர்கல்வி மேற்கொள்ள முடியாமல் இப் பிரதேச மாணவர்களுக்குவரப் பிரசாதமாக அமையும். (ச)

# 'இராமகிருஷ்ணர் உலக ஜீவராசிகளுக்குஒளிவிளக்கு'

[யாழ்ப்பாணம்]

"பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஒரு அவதார புரு ஷர் மட்டுமல்ல; உலகில் வாழு கின்ற சகல ஜீவராசிகளுக்கும் ஒரு சிறந்த ஒளி விளக்கு என ஜெர்மன் தத்துவஆசிரியர் கூறி யுள்ளார்".

இவ்வாறு கோப்பாய் கிறிஸ் தவக் கல்லூரி ஆசிரியர் திரு. செ நடராசா, இணுவில் மஞ் சத்தடி விவேகானந்த கிராம முன்னேற்றச் சங்கம் நடத்திய இராமகிருஷ்ணர் நினைவு விழா வில் பேசுகையில் குறிப்பிட் டார்.

பண்டிதர் திரு. வே. சண் முகலிங்கம் பேசுகையில்:- "விவேகானந்தரின் இறைவன் எங்கே என்ற கேள்விக்கு நேரி டையாகவே விடையளித்ததன் மூலம் உலகின் பலரது கேள் விக்கும் விடையளித்த பெருமை அவரையே சாரும்" என்றார்.

ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத் தலைவர் உட்படப் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். (பி)

## திறப்புவிழா

[யாழ்ப்பாணம்]

ஏழாலைசித்திவிநாயகர் நூல் நிலையத் திறப்பு விழாவும், புத்தகக் கண்காட்சியும், ஏழாலைமேற்கு ஐக்கிய நாணய சங்க மண்டபத்தில் நடை பெற்றது.

பிரதம விருந்தினவாக முன்னாள் பாராளுமன்ற மானிப்பாய்த் தொகுதி உறுப் பினர் திரு வி. தர்மலிங்கம், வலிதெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ மகாலிங்கம். சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு சி குமரவேல் ஆகியோர் கலந்து கொண்ட னர். (பி)

## இருமாடிக் கட்டடம்

(பண்டத்தரிப்பு)

தென்னிந்திய திருசபையின் யாழ். அத்தியட்ச ஆதீனத் தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் பண்டத்தரிப்பு 'ஹரி யட் வின்ஸ்லோ" மகளிர் இல் லத்தில் இருமாடிக் கட்டடம் ஒன்று சுமார் ஐந்து லட்சம் ரூபா செலவில் திறவப்படவுள் ளது,

இதற்கான ஒழுங்குகள் தற் போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக இல்ல முகாமை முகாமையாளரும். பண்டத் தரிப்பு வை எம் சி ஏ தலை வருமான எஸ் இரத்தினவேல் தெரிவித்தார்.

(பண்டத்தரிப்பு)

மாதகல் கிழக்குப் பகுதியில் அண்மையில் இறந்த டி. சி விக்கிரமரத்தின என்பவர் மூளைக்காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டிருந்ததாக பரி சோதனை மூலம் தற்போது கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ். பிரதேச மலேரியா தடுப்பு இயக்கத் தினர் அப்பகுதியிலுள்ள 120 வீடுகளுக்கு மலத்தியன் மருந்து தெளித்து இரத்த பரிசோதனையும் மேற்கொண் டனர்.

# சுகாதார நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ள காங்கேசன் துறை சுகாதார நிலையத்துக்கு நிரந்தர கட்டடம் ஒன்றை அமைக்க சுகாதார அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

காங்கேசன்துறை சுகாதார நிலையமும் குடும்பநல சேவை யாளர் பயிற்சிநிலையமும் இது வரை காலமும் காங்கேசன் துறை சிமெந்துக் கூட்டுத்தா பனத்தின் வளவில்இயங்கி வந் தன. இரு நிலையங்களையும் கூட்டுத்தாபனத்தின் வேறு ஒரு காணியில் அமைத்துக் கொடுக்க கூட்டுத்தாபனம் 7 லட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்கியிருந்தது. அக்காணி யும் திருத்தம் செய்யப்பட்டு வந்தது.

இதற்கிடையில் மேற்படி சுகாதார நிலையமும் தெல்லிப் பழை அரசினர்வைத்தியசாலை யும் ஒன்றிணைக்கப்பட்டு சுகா தாரநிலையம் தெல்லிப்பழைக்கு மாற்றம் செய்யப்பட்டது. இதனால் தெல்லிப்பழை அரசி னர் வைத்தியசாலைக்கு அரு காமையில் காணி சுவீகரித்து சுகாதார நிலையத்தையும் குடும்பநல சேவையாளர் பயிற்சி நிலையத்தையும் அமைக்க சுகாதார அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி கூட்டுத்தாபனத் தில் இருந்து கிடைத்த 7 லட் சம் ரூபாவில் இவற்றை அமைக்க வைத்தியசாலைக் கமிட்டி ஏற்பாடுகள் செய்து வருகிறது.

# நவாலி திருச்சபையின் 125வது ஆண்டு நிறைவுவிழா

[மானிப்பாய்]

நவாலி திருச்சபையின் நூற் றிருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 29ம் திகதி சிறப்பாகக் கொண்டா டப்படவிருக்கிறது.

இது தொடர்பான ஆரம்பக் கட்ட விழாவினை தென்னிந் தியத் திருச்சபையின் யாழ். அத்தியட்சாதீனத்தைச் சேர் ந்த மானிப்பாய்வட்டார ஒய்வு நாட் பாடசாலைப் பிள்ளைகள் நவாலி திருச்சபையில் கொண் டாடினர்.

அன்றுகாலை செல்வி றெபினி ஜேசுதாசன் தலைமையில் ஆரம்பமான இவ்விழாவில் உடு வில், இணுவில், மானிப்பாய், சத்தியபுரம், நவாலி, சண்டி லிப்பாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஏழு சபைகள் பங்கு கொண்டன திருமதி எ. பவஸ் சிங்கம், கிறிஸ்தவ நம்பிக்கை யும் விசுவாசமும், கிறிஸ்தவ னின் கடமையும் என்னும் பொருள்பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

மாணவர்களிடையே பாட்டு, பேச்சு, மனன வசனம், நாட கம் ஆகிய விஷயங்களில் போட்டிகள் நடைபெற்றன. அருட்திரு அம்பலவாணரின் ஆசீர்வாதத்துடன் விழா முடி வுற்றது.

சமூகம் கொடுத்திருந்தவர் களுக்கு நவாலி ஒய்வுநாட் பாடசாலை ஆசிரியர்கள் சிற் றுண்டி வழங்கி உபசரித்தனர்.

## ரூபவாஹினி

மாலை

- 5-00 செய்திகள்
- 5-05 ஒலிம்பிக் விளையாட்டு நிகழ்ச்சி
- 5-20 'பளோ மீ' ஆங்கில கல்வி நிகழ்ச்சி
- 5-35 சிறுவர் நிகழ்ச்சி
- 6-00 கொத்மலை திட்டம் விவரணச் சித்திரம் (சிங்களம்)
- 6-30 செய்திகள் (தமிழ்)
- 6-55 கலையரங்கம்
- 7-25 நாடகம் (சிங்களம்)
- 8-00 செய்திகள் (சிங்களம்)
- 8-25 'டிபரன்ற் ஸ்ரோக்ஸ்'
- 9-00 செய்திகள் (ஆங்கிலம்)
- 9-25 மகாவலித் திட்ட நிகழ்ச்சி (விவரணம்)
- 10-15 ஒளிபரப்பு முடிவு.


றெருசோ ஷிப்ஸ்

TERRAZZO CHIPS

IMPORTED

- ★ கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLLAND)
- ★ அலுமினியம் தகடுகள் (18g x 16g)
- ★ வெள்ளைச் சீமெந்து
- ★ காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
- ★ TERRAZZO மற்றும் தரைக்குத் தேவை யான சகல பொருட்களும் கிடைக்குமிடம் Rs. 6/75-க்கு மேல்

றம்சன்ஸ்

443, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12

தொலைபேசி: 34411 — 31511



நாடெங்கும் நாகரிக நங்கையர் நாடி அணிவது

ஷாமினு கும் கும்

(சாந்துப்பொட்டு) – கறுப்பு, சிவப்பு, மறூன்

பொட்டு வாங்கும்பொழுது ஷாமினு கும் கும் என்று கேட்டு வாங்குங்கள்.

மொத்தமாக விற்கும் நிலையங்கள்:-

- ★ அம்பிகாவதி (F)பான்ஸி (G) குட்ஸ் — பெரியகடை.
- ★ நடராஜா (F)பான்ஸி ஹவுஸ் — ஜும்மா பள்ளிவாசல் வீதி.
- ★ என். எம். எஸ். — நவீனசந்தை.
- ★ நிலாம்ஸ் — ஆஸ்பத்திரி வீதி.

WHITEFIELD INDUSTRIES

DE VOS AVENUE, COLOMBO - 4.

VALLAI ROAD, CHANKANAI.

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-30, 6-00
முத்துராமன் - ஜெயலலிதா
தங்கவேலு
கணவன் மனைவி

பாலகன் V.V.
(சாந்தி முன்பாக)
Daily 5 Shows
CANNIBAL HOLOCAUST
Adutls only

நியூ சாந்தி மினி
10-30, 2-30, 4-30, 6-30
Pending Grievences
(JUNGLE WOMEN)
—இன்று மட்டும்—

ஸ்ரான்லி மினி
5"X5" திரைவானில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
LAST ORGY
ஹிற்லர் ஆட்சியில் தீவிர வாத பெண்களுக்கு செய்த கொடுமைகளும் அவர்கள் படும் துன்பங்களையும் சித்தரிக்கும் படம்.
Adults only

குமரன்
மினி சினிமா
10-30, 2-30, 4-30, 6-30
Gods Gun
(War Film)
பயங்கர சண்டைகள், குதிரை ஓட்டங்கள் நிறைந்த படம்

உஷா மினி
10-30, 2-30, 4-45, 6-45
CODE NAME WILD GEESE
மிக நவீன ஆயுதங்களுடன் 6 கொமாண்டோக்கள் கொண்ட கொரில்லா கோஷ்டி இராணுவ முகாம் மீது தாக்குதல்

மனோகரா
வெண் திரையில்
எம். ஜி. ஆர்.
வைஜந்திமாலா, நம்பியார் பாலையா நடித்த
பாக்தாத் திருடன்
புதிய பிரதி
கடைசி சில தினங்கள் மட்டும்

S.T.L. மினி சினிமா
திருநெல்வேலி
10-30, 2-15, 5-15
சிவாஜி, பானுமதி நடித்த
கள்வனின் காதலி
22, 23 திகதிகளில்
கமல், அம்பிகா நடித்த
உயர்ந்த உள்ளம்

மே(f)பெயர் மினி சினிமா
(கன்னாதிட்டி காளிகோவில் அருகில்)
10-30, 4-45, 7-00
"Basket Case"
தன் உடலில் ஒட்டிப் பிறந்த ஒரு அகோர உருவம் கொண்ட பயங்கர ரகுலாவின் திகில் நிறைந்த கதை.

## ஜனாதிபதிக்கு சி. எம். யு. தந்தி

(யாழ்ப்பாணம்)

இலங்கை வர்த்தக, கைத்தொழில் பொது தொழிலாளர் சங்கம் (சி. எம். யு) அரசவங்கி தொழில் சங்கத்தின் இரு தலைவர்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு ஜனாதிபதிக்கு அவசர தந்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அந்தத் தந்தியில் அவசர காலசட்டத்தைப் பயன்படுத்தி அரச வங்கி ஊழியர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளை தடைசெய்தமைக்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச வங்கி ஊழியர்கள் சம்பள உயர்வுகோரி 16ம் திகதி நடாத்திய ஆர்ப்பாட்டத்தையும் அரசு தடைசெய்தது.

வங்கி ஊழியர்களின் ஜனநாயக உரிமைகளை பெறுவதற்கு சி. எம். யு. என்றும் பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கும் என்று அந்த தந்தியில் குறிப்பிட்டுள்ளது. (பி)

"லதா" மினி
(கோண்டாவில்)
10-30, 3-30, 6-45
விஜயகாந், அனுராதா
மதுரை சூரன்

லிபேர்ட்டி மினி
இளைஞர் மொய்ப்பதன் காரணம் என்ன?
தினசரி 5 காட்சிகள்
INTRUSION CAMBODIA

நியூ சினிமாலயா
[R. G பில்டிங் மேல்மாடி]
10-30, 2-30, 6-30,
ரஜனிகாந்த்-அம்பிகா
பாக்கியராஜ்-அனுராதா
நான் சிகப்பு மனிதன்
5X5 வெண்திரையில்

சரவணபவன் மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-30, மட்டும்
Private-Lessons
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)
4-30p.m.and 7-15P.m only
"Kill Them all and Come Back alone"

வெலிங்டன்
10-30, 2-15, 4-30, 6-45,
திகதி: 14 15
THEATRE OF DEATH
16 முதல்
DRAGON DIES HARD
(புருஸ்லியின் படம்)
முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் காட்டப்படுகிறது.

வீகோ சினிமா
10-30, 2-30, 6-30
2-வது மாதமாக ஓடுகிறது!
தியாகராஜன், சிவசந்திரன், பூர்ணிமா ஜெயராம், சில்க்சுமிதா, ஜெய்சங்கர் நடித்த
ஜானு மகேந்திரரவின்
நீங்கள் கேட்டவை
ஈஸ்ட்மன் கலர்

# "மக்களின் பேராதரவு கிடைத்தால் ஆசியாவிலேயே சிறப்பான இடத்தை நிச்சயம் பெறும்"

## தனியார் வைத்தியக் கல்லூரி திறப்பு விழாவில் கருத்து

(யாழ்ப்பாணம்)

"பணவசதி ஏதுமின்றி ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் தனியார் வைத்தியக் கல்லூரிக்கு, பொதுமக்களின் ஆதரவு பெருமளவில் கிடைக்குமானால், ஆசியாவிலேயே சிறந்த வைத்தியக் கல்லூரியாக வருங்காலத்தில் திகழும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை"

இவ்வாறு, யாழ். நகரில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட, 'வட இலங்கை தனியார் வைத்தியக் கல்லூரி'யின் திறப்பு விழா நிகழ்ச்சியில், வைத்திய கலாநிதி ஜே பி. சேவியர் கூறினார்

மேற்படி கல்லூரியின் தலைவர் டாக்டர் ரி. கெங்காதரன் சம்பிரதாய முறைப்படி குத்து விளக்கேற்றி விழாவைத் தொடக்கிவைத்தார்.

இத்திறப்பு விழாவின் ஞாபகார்த்தமாக, இக் கல்லூரியின் முன்றலில், வைத்தியக் கலாநிதி ஜே பி. சேவியர் மாங்கன்றொன்றை நாட்டிவைத்தார்.

இத்திறப்புவிழா நிகழ்ச்சியில். இக் கல்லூரியின் காரியதரிசி டாக்டர் ஜே பி. ஸ்பிலிப் பேசுகையில்,

"கல்லெறி வாங்கும் மாமரங்களே சிறந்த பலனைக் கொடுக்குமென்று முதியோர்கள் கூறுவார்கள். அதுபோல் இக்கல்லூரியும், வருங்காலத்தில் தனக்கு ஏற்படும் பல இக்கட்டான கட்டங்களைத் தாண்டி, இலங்கையிலேயே சிறந்த தனியார் வைத்தியக் கல்லூரியாகத் திகழும் என்பதை நான் உறுதியாகக் கூற ஆசைப்படுகின்றேன். இதை மையமாகக் கொண்டுதான், இக் கல்லூரியின் முன்னால் மாமரம் ஒன்றும் நாட்டப்பட்டுள்ளது" எனக் கூறினார்.

வட இலங்கை தனியார் வைத்தியக் கல்லூரியின், நூலகத்துக்கென, இத்திறப்பு விழாவில் கலந்து கொண்ட பல டாக்டர்கள், பெருமளவிலான புத்தகங்களையும், உபகரணங்களையும், டாக்டர் எஸ். சபாரட்ணத்திடம் கையளித்தார்கள்.

இவ் விழா, ஆடம்பரம் ஏதுவுமின்றி மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (வி)

## இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி: 5 (1985-8-21)
கிழமை: புதன்
திதி: பஞ்சமி
காலை 6-53ன் மேல் ஷஷ்டி
நக்ஷத்திரம்: சித்திரை
மு. ப. வரை

மேடம்; ஊஸ்திர வழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. காதலர்கள் வாழ்க்கையில் தித்திப்பான சம்பவங்கள் இடம்பெறும். புத்திரவழியால் மகிழ்ச்சியும் உண்டு.

இடபம்: நண்பர்களுடன் கருத்துவேற்றுமைகள் உருவாகலாம். வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக்கொள்ளவேண்டாம். பொருட்செலவும் உண்டு.

மிதுனம்: தொழில்துறையில் நன்மை ஏற்படும். பிதாவழியால் ஆதரவும் உண்டு. கொள்கைவழி வாழ்க்கையை அமைப்பதில் மகிழ்ச்சியடைவீர்கள்.

கடகம்: கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். ஒவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும் சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம்.

சிங்கம்: காதலர்களுக்கு கனகுஷியான தினம். பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். இல்லத்தில் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும்.

கன்னி: முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தென்படும் கொடுத்தவாக்கை காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள். நண்பராலும் நஷ்டமுண்டு.

துலாம்: அபாயகரமானகாரியங்களில் ஈடுபடுவோர்கள் மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ள வேண்டும். தெய்வநம்பிக்கை சிறந்த பயன் தரும்.

விருச்சிகம்: எழுத்தாளர்களுக்குச் சிறப்பான தினம் இருக்கும் இடத்தில் ஆதரவு பெருகும். சிலருக்கு பொதுசன தலைமையும் கிடைக்கலாம்.

தனுசு: திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும் அடுத்துக்கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர். சிலருக்கு நூதனரோகமும் தென்படலாம்.

மகரம்: மாதுருவழிப் பெருமைக்கும் இடமுண்டு. மனம் போல் யாவும் நடக்கும். உறவினர் கொண்டாட்டமும் உண்டு.

கும்பம்: தாம்பத்திய வாழ்வில் அன்பு தவழும். வாழ்க்கையின் தரமும் உயரும். காதலர் வாழ்வில் கற்கண்டான தினம்

மீனம்: பூமிப்பிணக்குகளால் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ளநேரிடும் வாகனம் செலுத்துவோர் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். நிதானம் நன்று.

திருமலை
- வே. ரவீந்திரன் -

# "சம்பள உயர்வு 50வீதம்வேண்டும்"

(மாவிட்டபுரம்)

வாழ்க்கைச் செலவுக்குஏற்ப 50 வீத சம்பள உயர்வு வழங்கும்படி ஸ்ரீலங்கா தபால்தந்தி தொலை தொடர்பு சேவை சங்க வடபிரதேசக்கிளை அரசுக்கு கோரிக்கை விடுத்துளது.

மேற்படி சங்க 27வது வருடாந்த மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றசமயம் மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு:

தற்போதைய நிலையில் வாழ்க்கைச் செலவை சமாளிக்கும் வகையில் 50 வீத சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் வாழ்கைப்படி 5 ரூபாவால் அதிகரிக்கப்படவேண்டும்.

★ தற்போது திருமணமானவர்களுக்கு வழங்கப்படும்விசேடபடிகள் திருமணமாகாதவர்களுக்கும் வழங்கப்படவேண்டும்

★ சனிக்கிழமையை விடுமுறை நாளாக பிரகடனம் செய்யப்பட வேண்டும். அன்றேல் விசேட சம்பளம் வழங்கப்படவேண்டும்.

★ தொலைத் தொடர்பு திணைக்களத்தை தனியாரிடம் ஒப்படைக்கும் திட்டத்தை கைவிட வேண்டும்.

மேற்படி சங்க தலைவராக து. குகதாஸ் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக மு. விவேகானந்தமும், பொருளாளராக து. குராஜாவும் தெரிவுசெய்யப்பட்டார்.

திருவாளர்கள்: ரீ. ராஜகோபால், ஐ. வீ. பொன்னுத்துரை, குமரகுரு. வைகுந்ததாசன், கே. ரி. இராசசிங்கம், செல்வராசா, பவளத்துரை. செல்வி ஜெயசோதி தர்மலிங்கம் ஆகியோர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## ஊழல்பற்றி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டப்பட்டிருக்கின்றது.

இச் சுவரொட்டியில் வேலணை ப. நோ. கூ. சங்கத்தில் இடம்பெற்ற சில ஊழல் மோசடிகள் பற்றி எழுதப்பட்டிருக்கின்றது

இப்படியான மோசடிகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதில் ஈடுபடுவோரையும் ஈடுபட்டோரையும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் கடுமையாக எச்சரிக்கின்றனர் எனவும் எழுதப்பட்டிருந்தது.

## மகாகும்பாபிஷேகம்

(மாவிட்டபுரம்)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீ துர்க்காதேவி ஆலய அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 22-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

கடந்த 18-ம் திகதி கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. 22-ம் திகதி கும்பாபிஷேகத்தைப் பிரதிஷ்டாமணி சிவஸ்ரீ ந. சபாரத்தினக் குருக்கள் நடாத்திவைப்பார்.

பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட மேற்படி ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. கும்பாபிஷேகம் தொடர்ந்து 48 நாட்களுக்கு விசேட உற்சவம் நடைபெறும்.

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அருட்திரு. வின்சன் பற்றிக் அடிகளாரின் உறவுகளின் இராகங்கள் நூல் வெளியீட்டு விழாவும், பாராட்டு விழாவும் அண்மையில் புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இவ் விழாவிற்கு அருட்திரு கிருபானந்தன் அவர்கள் தலைமை தாங்கினார். அதிபர் திரு. க. திருச்செல்வம் பாராட்டுரை வழங்கினார். இந்நூலின் முதற்பிரதியை திரு. வே. செயமாலை திரு. மு. பொன்னம்பலத்திடமிருந்து பெற்றுக் கொண்டார். திரு. றிச்சேட் டோமி பொன்னாடைபோர்த்திக் கௌரவித்தார். (ச)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

படுகொலைகள் மூலம்--------

# யுத்த நிறுத்தத்தை அரசு மீறியுள்ளது! குற்றஞ்சாட்டுகிறது 'ரெலோ'

(யாழ்ப்பாணம்)

"ஸ்ரீலங்கா அரசு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பல நூற்றுக் கணக்கான தமிழ் பேசும் மக்களை படுகொலை செய்து வருகின்றது. இதன் மூலம் ஸ்ரீலங்கா அரசானது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளது தெளிவாகின்றது"

தமிழ் ஈழ விடுதலை இயக்கத் தலைவர் ஸ்ரீ சபாரத்தினம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாது:

ஸ்ரீலங்கா அரசு இலங்கை தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு காலத்திற்குக் காலம் பேச்சுவார்த்தை என்ற கபட நாடகத்தை ஆடி தமிழ்பேசும் மக்களின் முதுகில் குத்தி வருவது யாவரும் அறிந்த உண்மை. இதே வேளை பரந்துபட்ட மக்கள் சக்தியுடன் எழுந்த எமது விடுதலைப் போராட்ட நடவடிக்கைகளின் காரணமாகவும் உலக அரங்கில் தமக்கு ஏற்பட்ட அவமானத்தை மூடி மறைக்கும் நோக்கடனும், இந்தியா எமது போராட்டத்தின் மீது கொண்டுள்ள கரிசனையாலும் இந்திய அரசின் நிர்ப்பந்தத்தாலும் திம்பு பேச்சுவார்த்தையை அரங்கேற்ற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானது ஸ்ரீலங்கா அரசு.

இப்பேச்சு வார்த்தை ஸ்ரீலங்கா அரசின் வேஷத்தை உலக நாடுகள் மேலும் அறிந்து கொள்வதற்கு வழி சமைத்துவிட்டது. (க)

## ராஜீவிடம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எரித்து சேதப்படுத்தப்பட்டது போன்ற உண்மைச் சம்பவங்கள் அடங்கிய வீடியோ திரைப்படச்சுருள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் ஈழதேசிய விடுதலை முன்னணித்தலைவர்கள் நேரில் சந்தித்துக் கையளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பெ-மா)

## தமிழர்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை" என்று இந்த முன்னணியின் முக்கிய தலைவர் ஒருவர் நேற்று சென்னையில் தெரிவித்தார்

வவனியா, திருகோணமலை ஆகிய பகுதிகள் ஆயுதப் படையினரால் முற்றுகை சுற்றி வளைக்கப்பட்டுள்ளதாகவும் தமிழர்கள் பயத்தினால் காட்டுக்குள் ஓடி விட்டதாகவும் அவர் தெரிவித்தார்

இனப் பிரச்சினையை பேச்சுக்கள் மூலம் தீர்த்துவைக்க இந்தியா முயற்சி செய்வதை தாங்கள் எதிர்க்கவில்லை என்றும் ஆனால் இந்திய அரசின் வற்புறுத்தலின் பேரில் ஏற்பட்ட யுத்த நிறுத்தத்தை இலங்கை அரசு மீறுவதை இந்தியா கண்டிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்

## நல்லூர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளனர்.

இனந்தெரியாத இளைஞர்கள் வலியுறுத்திய தனைத் தொடர்ந்து இருப்பெடுப்பு நடந்ததால் இவர்கள் ராஜினாமா செய்ததாகக் கூறப்படுகிறது.

இவர்களது ராஜினாமாக் கடிதத்தில் காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (க)

## எரிபொருள்: தட்டுப்பாடு அபாயம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்தில் எரிபொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது

பெற்ரோலியம் கூட்டுத்தாபனத்தின் யாழ் கிளையிலும், மற்றும் எரிபொருள் விற்பனவு நிலையங்களில் உள்ள டாங்கிகளிலும் ஒரு துளிபெற்ரோல் டீசல் கூட இல்லை என்று நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

அதேசமயம் கள்ளமார்க்கட்டில் எரிபொருள்கள் அதிக விலைக்கு விற்பனையாவது குறிப்பிடத்தக்கது. (மா)

வேலையாட்கள் தேவை

மன்னார் நீர்விநியோகத் திட்டத்தில் தண்ணீர்த் தொட்டி நிர்மாணத்தில் பணியாற்றுவதற்கு, தச்சுவேலை செய்பவர்களும், கம்பி வளைத்து கட்டுமான வேலை செய்பவர்களும் உடன் தேவை.

நேர்முகப் பரீட்சைக்கு (22-8-85) வியாழக்கிழமை காலை 9-00 முதல் 3 00 மணிக்குள் நேரில் வரவும்.

நிர்மாண முகாமையாளர்,
(மன்னார் திட்ட அலுவலர்)

சாமுவேல் அன் கொம்பனி.
(பஸ் நிலைய முன்பாக)
யாழ்ப்பாணம். 166

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி. 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu, Box 49, Telegram Eelanadu, Telephone; 22389, 24126.

வ. பி. போக்குவரத்துச் சபை --------

# ஊழியர் இருவர் கடத்தப்பட்டனர்

(கல்வியங்காடு)

வட பிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த ஊழியர் இருவர் கோண்டாவில் டிப்போவில் இருந்து இனந்தெரியாத துப்பாக்கி நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

கோண்டாவில் பஸ் டிப்போவைச் சேர்ந்த சாலைப்பரிசோதகர்களான எம். டனிஷியஸ் (45 வயது), கே. வி. மகாலிங்கம் (வயது 40) ஆகிய இருவருமே நேற்றுக்காலை சுமார் பத்தரை மணியளவில் அங்கு வந்த இனந்தெரியாத நபர்களினால் விசாரணைகளுக்காக கடத்தப்பட்டுள்ளனர்.

## இந்திய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவங்கள் தொடர்பாக உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்துப் பேசிய சபை முதல்வரும், நிதியமைச்சருமான திரு. விஸ்வநாத் பிரதாப்சிங், இந்தப் பிரச்சினை குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாகவும், இப்பிரச்சினையைத் தீர்க்க பிரதமர் திரு. ராஜீவ் காந்தி சகல நடவடிக்கைகளும் எடுத்துவருகிறார் என்று குறிப்பிட்டார்.

அதி முக உறுப்பினர் திரு. மோகனரங்கம் இது குறித்துப் பேசுகையில், 'இலங்கையில் இடம்பெறும் சம்பவங்கள் குறித்து தமிழ்நாட்டு மக்கள் பெரிதும் உணர்ச்சிவசப்பட்டுள்ளார்கள் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தை இந்தியா தமது பொறுப்பில் ஏற்றுக்கொண்டிருக்கும் நிலையில் அங்கு இடம்பெற்ற இத்தகைய சம்பவங்கள் கடுமையானவையாகும். இலங்கைபிரச்சினை ஓர் உள்நாட்டுபிரச்சினை என்ற நிலைமை தாண்டிவிட்டது, எமது பிரதமர் இதனை ஓர் சர்வதேச பிரச்சினையாக ஆக்கவேண்டும் என்றார்.

இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு தங்கபாலு பேசுகையில் "இலங்கையில் இடம்பெறும் சம்பவங்கள் மனிதன்மைக்குகப்பாற்பட்டவை என்றார்.

லோக்சபாவில் பேசிய சபாநாயகர் திரு பல்ராம் ஜாக்கார் இச் சம்பவங்கள் குறித்து கவலைதெரிவித்ததோடு சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் இது குறித்து அறிக்கை சமர்பிக்குமாறு காம் பணித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## நேர்முகப்பரீட்சை

(கல்வியங்காடு)

மின்சாரப பகுதியின் கிளை அலுவலங்களில் ஏற்பட்டுள்ள காலி இடங்களை நிரப்பும் பொருட்டு யாழ்ப்பாணம் கச்சேரியில் நேர்முகப்பரீட்சை நடைபெறுகிறது.

## டில்லி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜீவ் காந்தி சென்னையிலுள்ள தமிழ்த் தீவிரவாதத் தலைவர்களுக்கு அவசர அழைப்பு விடுத்திருக்கும் அதே நேரத்தில்; இவர்கள் புதுடில்லி செல்வார்களா என்பது குறித்து இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை ஊர்ஜிதப் படுத்த முடியவில்லை.

நிலைமை இவ்வாறிருக்க இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இலங்கை ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தனவுடன் தொடர்புகொண்டு திம்பு பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கான சூழ்நிலை ஒன்றை ஏற்படுத்துமாறு கேட்டுள்ளார்.

புதுடில்லியில் ராஜீவ்-ஜே. ஆர். பேச்சுவார்த்தையில் இடம்பெற்ற உடன்பாட்டில் குறிப்பிட்டதிலும் பார்க்க மிகவும் குறைந்தளவான தீர்வையே திம்பு மாநாட்டில் இலங்கைக்குழு இப்பொழுது முன்வைத்திருக்கிறது என்பதனையும் ராஜீவ் காந்தி ஜே. ஆரிடம் சுட்டிக்காட்டி கவலை தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

## உட்பிரகார...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலைத் திருவிழாக்கள் காலை 7 மணிக்கு ஆரம்பமாகும்

இரதோற்சவமும், தீர்த்தோற்சவமும் காலை 7 மணிக்கு நடைபெறும்.

தினமும் சுவாமி உள் பிரகாரம் மட்டும் சுற்றி வலம் வரும் உள்பிரகாரம் தீர்த்தக் கேணியை உள்ளடக்கியதாக இருக்கும்.

முன்னைய பெருவீதி போன்ற இடவசதிகள் தற்போது இருப்பது குறிப்பிடத்தக்கது. (க)

## தந்தையும் கடத்தப்பட்டார்

(வவனியா)

வவனியாவில் 2 மாதங்களுக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்ட இராணுவ வீரரான நிமால் ஜெயவர்த்தனவின் தந்தை 'பொடி மாத்தயா' நேற்று இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

வவனியா-மன்னார் வீதியில் அவர் தங்கியிருந்த விடுதியில் வைத்தே அவர் கடத்திச்செல்லப்பட்டுள்ளார்.

## அடகு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டன,

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியிலுள்ள கு. தர்மலிங்கம் அடகு கடையிலேயே இக் கொள்ளை நடந்துள்ளது.

காரைநகரிலுள்ள தர்மலிங்கத்தின் வீட்டிற்கு ஒரு காரிலும் மோட்டார் சைக்கிலிலும் சென்ற ஆறு இனந்தெரியாத இளைஞர்கள் வீட்டை, சோதனைசெய்தபின்னர் தர்மலிங்கத்தை யாழ்ப்பாணம் அடகு கடைக்குக்கூட்டி வந்து இரும்புப் பெட்டியை திறந்து நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றதாக கூறப்படுகிறது.

மரண அறிவித்தல்

திருமதி நாகம்மா நல்லதம்பி

காலம் சென்ற திரு. வல்லிபுரம் நல்லதம்பி அவர்களின் அன்பு மனைவியும், ஓய்வுபெற்ற தபாலதிபர் திரு. ந தர்மராசா, முன்னாள் பா ம உ திரு. வ ந. நவரத்தினம் பாக்கியரத்தினம். குணமணி, லீலாதேவி ஆகியோரின் அருமைத் தாயாரும், மகேஸ்வரி, திரு. ஆ சிவகுரு, திரு வி சதாசிவம், இ.ரபகுதி ஆகியோரின் மாமியாருமாகிய திருமதி நாகம்மா நல்லதம்பி அவர்கள் இறைவனடி சேர்ந்துள்ளார். நல்லடக்க ஆராதனை 21-08-85 புதன்கிழமை பி ப. 4 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றர்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
நுணுவில் மேற்கு,
சாவகச்சேரி. 169

மரண அறிவித்தல்

A. V. பொன்னையா

ஊரெழுவைச் சேர்ந்த A. V பொன்னையா தமது 92-வது வயதில் இறைபதமடைந்தார் அன்னார் நல்லம்மாவின் அன்புக்கணவரும், கொழும்பு ஸ்ரேற் வங்கி முன்னாள் உத்தியோகஸ்தர் சத்தியநாதன், திருப்பதி, ஆரூரன் (நாதன்) சிறிவிக்னேஸ்வரா அச்சக உரிமையாளர், காலஞ்சென்ற சௌந்தரநாதன், சிவநாதன், சற்குணநாதன ஆகியோரின் தந்தையாரும், புவனேஸ்வரி, பரமேஸ்வரி, சரோஜினிதேவி, திருமதி சற்குணநாதன் (யாழ். அரசினர் வைத்தியசாலை), காலஞ்சென்ற பூபாலசிங்கம் ஆகியோரின் மாமனாரும், தாமரவல்லி தோட்ட அதிபர் திரு A V கிருஷ்ணபிள்ளை அவர்களின் அருமைத் தமையனுமாவர் அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று புதன்கிழமை பி ப 3 மணிக்கு (21-8-85 பொக்கணை மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. ஆரூரன்

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். 168

மரண அறிவித்தல்

நடராசபிள்ளை ஆனந்தராசா

ஆனந்தராசா காலமானார். இவர் (ஆனந்தர்) காலம் சென்ற நடராசபிள்ளையினதும் இரத்தினம்மாவினதும் அன்பு மகனும். செல்வராசா (தபால் திணைக்களம்). இராஜேஸ்வரியின் அன்புத் தம்பியும், துரைரத்தினம் (ஆனைப்பாறிய புகையிரதப்பகுதி உத்தியோகத்தர்) மைத்துனரும். பத்மினி (யாழ் பல்கலைக்கழகம்), குமுதினி, விக்னேஸ்வரன், செந்தூராணின் அன்பு மாமனும் கௌரி, அர்ச்சுனனின் சிறிய தந்தையுமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 21-8-85 (இன்று) புதன்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னாரது இல. 31/21, சபாபதிவீதி, தலையாளி யாழ்ப்பாணத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

(164) தகவல்: வ. துரைரத்தினம்.